# தென்னாடு



செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053 கும்பம் நல்லோரை மாசித் திங்கள் 23ம் நாள் நிறைமதி நாள் (07-03-2023 செவ்வாய்க்கிழமை) வெளியீடு +94 21 221 2739


## செல்லப்பா சுவாமிகள் குருபூசை தினம்



பங்குத் திங்கள் 10ம் நாள் (24-03-2023) வெள்ளிக் கிழமை அன்று செல்லப்பா சுவாமிகள் குருபூசை இடம் பெறும். சுவாமிக்கு திரு மஞ்சனம் ஆற்றி பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

# சிவபூமியில் மீண்டும் தழைத்தோங்கி வருகின்ற சிவவழிபாடுகள்

# இம்முறை பத்தியுடன் பல இடங்களில் பெருஞ்சிவனிரவு நோன்புகள்

## ஆறு இலட்சம் அடியார்களைத் தாண்டிய திருக்கேதீச்சர சிவனிரவு



சிவபூமியாம் இலங்கையில் சிவவழிபாடுகள் மற்றும் அது பற்றிய விழிப்புணர்வுகள் மீண்டும் தழைத்தோங்கி வருகின்ற வெளிப்பாடுகளை பல இடங்களிலும் இம்முறை கண்கூடாகக் காணக்கூடிய தாக இருந்தது. குறிப்பாக பாவங்களைத் தீர்க்கும் பாலவியில் அமைந்துள்ள திருக்கேதீச்சரத்தில் சிவனிரவு தினத்தில் ஆறு இலட்சத்திற்கும் அதிகமா சிவனடியார்கள் வந்து வணங்கிச் சென்றுள்ளனர்.

அத்துடன் இலங்கையில் பல இடங்களில் சிவனிரவு வழிபாடுகள், பூசைகள் மற்றும் சமய நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. யாழ்ப்பாணத்தில் நகுலேச்சரம், திருவாசக அரண்மனை, வாரிவனேசர் திருக்கோயில், சுன்னாகம் சிவன்கோயில், காரைக்கால் சிவன்கோயில் என்று பல்வேறு இடங்களில் அடியார் திருக்கூட்டங்கள் அலைமோதியவண்ணமே இருந்தது. அத்துடன் ஊரில் பொதுவாக எல்லா கோயில்களிலும் தொடர்ந்து நான்கு கால திருமஞ்சனம் மற்றும் பூசைகள் சிறப்பாக நடைபெற்றன. அதுபோல் கிழக்கில் கோணேச்சரம் மற்றும் மட்டக்களப்பில் பல கோயில்களில் சிவனிரவு வழிபாடுகள் இம்முறை மிகவும் சிறப்பாக இடம்பெற்றன.

யாழில் பாடசாலைகள் என்று பார்க்கும்போது, யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள், பெற்றோர்களுடன் சிவனிரவு நிகழ்சிகள் சிறப்பாக நடைபெற்றது. அத்துடன் நயினை நாகபூடணி அம்மன் திருக்கோயிலில் புதிதாக அமைக்கப்பட்ட அறிவுத்திருக்கோயிலில் ஆடல்வல்லான் மற்றும் சிவகாமி அம்மன் திருவுருவச்சிலைகள் எழுந்தருளச் செய்யப்பட்டு செந்தமிழ் பூசைகள் இயற்றப்பட்டன.

அத்துடன் தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் பெருஞ்சிவனிரவு நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன. கடந்த சில ஆண்டுகளாக சிவ வழிபாடுகள் மீண்டும் தலை தூக்கியிருப்பது கண்கூடாக காணக்கூடியதாக இருக்கிறது.

## சீர்மன்னு சிவாக்கிர தேசிக சுவாமிகள் அவர்கள் கடவுள் மங்கலத்தில் கலந்து கொள்ள யாழ் வருகிறார்




தமிழ் நாட்டினைச் சேர்ந்த சீர்மன்னு சிவாக்கிர தேசிக சுவாமிகள் அவர்கள் பங்குனித் திங்கள் யாழ்ப்பாணத்தில் புதிதாகக்கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் சிவன் கோயிலின் கடவுள் மங்கல நன்நீராட்டில் கலந்து கொண்டு அருளாசிகள் வழங்குவதற்காக யாழ் வருகிறார்.

சுவாமிகள் தமிழ் நாட்டின் பட்டி தொட்டி எங்கும் திருமுறைகளின் பெருமைகளைக் கொண்டு சேர்ப்பது மட்டுமல்ல அதனை பாடியும் பரவியும் அளப்பரிய சைவப்பணிகளை ஆற்றி வருகிறார். சுவாமிகளின் யாழ் வருகை நிச்சயம் சிவபூமியின் சைவ வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் மாணவர்களைச் சந்தித்து அருளாசிகள் வழங்குவதுடன் திருமுறைகளின் பெருமை பற்றியும் பேசவுள்ளார். சுவாமிகளைச் சந்திக்க விரும்பும் சிவனடியார்கள் யாழ்ப்பாணம் கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினைத் தொடர்புகொள்ளலாம்.

திருச்சிற்றம்பலம்.

## அருட்குருநாதர் ஒளியகம் ஒளியரசு ஐயா கடவுள் மங்கலம் இயற்ற யாழ் வருகிறார்



தெய்வத்தமிழ் வழி, இறை புகழ்பாடியும் பரவியும், வாழ்த்தியும், வணங்கியும், போற்றியும், ஆற்றியும், இயற்றியும், உருகியும், ஒடுங்கியும், உள்நின்று உணர்ந்து வழிபடும், தமிழர் வாழ்வியல் வழிவந்த வழிபாட்டு முறைகளைப் புதுப்பித்து, மந்திரத் தமிழினை சைவத் தமிழரிடையே மீண்டும் புத்துயிர் பெறவைக்கும் அரும்பணியை ஆற்றிவருகின்ற நந்திவரம் இராமசாமி நடராஜன் ஒளியரசு அவர்கள் யாழ்ப்பாணம் வருகிறார்.

மறைமலை அடிகளார் வழிவந்த அருட்குருநாதர் ஒளியரசு ஐயா அவர்கள் 10,000 க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு தெய்வத்தமிழில் தீக்கை கொடுத்து, தமிழ்நாடு எங்கும் சைவத்தினையும், தமிழையும் தழைத்தோங்க அடித்தளம் இட்டு வருகின்றார் . அத்துடன் ஆதிப் பண்பாட்டின் அழகிய தமிழ்முறை வாழ்வியல் சடங்குகளை, முன்னர் போலவே தமிழிலே செய்யும் நெறிமுறைகளை அடுத்த தலைமுறைக்கு ஊடு கடத்துவதுடன், கடைப்பிடித்தும் வருகிறார். இதுவரை அண்ணளவாக 1600 மனையறம் ஏற்கும் மங்கல நாண் அணிவித்தல்களையும், பல புதுமனைப்புகு விழாக்களையும் மற்றும் தமிழர் வாழ்வியல் சடங்குகளை செந்தமிழில் செய்துள்ளார்.

ஐயா அவர்கள் யாழ்ப்பாணம் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் அழைப்பினை ஏற்று கொக்குவில் பதியில் புதிதாக அமைக்கப்படுகின்ற சிவன் கோயிலின் கடவுள் மங்கல நன்நீராட்டு நிகழ்வினை செந்தமிழில் ஆற்ற யாழ்ப்பாணம் வருகிறார்.

திருச்சிற்றம்பலம்.

## தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயில் பெருஞ்சிவனிரவுத் திருக்கோலம்



முதலாம் காலம்



இரண்டாம் காலம்



மூன்றாம் காலம்



நான்காம் காலம்

# தென்னாட்டில் பெருஞ்சிவனிரவு வழிபாடு



உலகின் மூல தத்துவமாக பாரிடை ஐந்தாய் பரந்து விரிந்து விளங்குகின்ற எம்பெருமான், உலகில் எங்கும் காணா வண்ணம் ஐம்பெரும் பூத தத்துவங்களை ஒருங்கே தன்னகத்தே கொண்டு, ஐம்பூதநாதராக கொக்குவில் தென்னாட்டு பதியில் திருவுளம் கொண்டு உறைகின்றார். இத்திருப்பதியிலே பெருஞ்சிவனிரவு வழிபாடுகள் திருவருளோடு சிறப்பாக இடம்பெற்றிருந்தது. பெருஞ்சிவனிரவு இம்முறை மாசித் திங்கள் 6ம் நாள் (பெப்ரவரி 18) சனிக்கழுவாய் உடன் கூடி வந்திருந்தமை சிறப்பாகும்.

தென்னாட்டில், கண்ணுதற் பெருங்கடவுளே கழகமொடு அமர்ந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த பசுந்தமிழால் பெருஞ்சிவனிரவு வழிபாடுகள் இடம்பெற்றிருந்தது. பெருஞ்சிவனிரவில் தென்னாடு ஐம்பூதநாதப் பெருமானுக்கு நான்கு சாமமும் விசேட திருமஞ்சனம், அமுது, பழம், மலர், திருமுறை விண்ணப்பம், இசை அர்ச்சனை என இறைவன் வகுத்த முறையில் இடம்பெற்றிருந்தது.

**முதலாம் சாமம்** - பசுவின் ஐந்து திரவியங்களால் (பஞ்சகவ்வியம்) திருமஞ்சனம் செய்து, சிவப்பு பட்டாடை சாற்றி, விளக்கெண்ணெயில் விளக்கேற்றி, அமுதாக குழைசாதம் பொரியல், வில்வப்பழம் படைத்து, சிவபுராணம் ஓதி தாமரை, திருநீற்று பச்சிலை கொண்டு அர்ச்சனை இடம்பெற்றது. இசை அர்ச்சனையாக திருமுறையிசை இடம்பெற்றது. திருமுறையிசை நிகழ்த்தியோர்கள் பு. கோபிசாந், வயலின் - த. எழிலினி, மிருதங்கம் - ந. நந்தகுமார்

**இரண்டாம் சாமம்** - ஐயமுதத்தினால் (பஞ்சாமிருதம்) திருமஞ்சனம் செய்து, மஞ்சள் பருத்தி ஆடை சாற்றி, இலுப்பை எண்ணெயில் விளக்கேற்றி, அமுதாக பரமான்னம் லட்டு, பலாப்பழம் படைத்து, “இருநிலனாய் “ எனத் தொடங்கும் திருத்தாண்டகம் பாடி வில்வம், தாமரை கொண்டு அர்ச்சனை இடம்பெற்றது. இசை அர்ச்சனையாக வாய்ப்பாட்டிசை இடம்பெற்றது. வாய்ப்பாட்டிசை வழங்கியோர் த. ரமணிகாந், வயலின் - த. எழிலினி, மிருதங்கம் - ஸ்ரீ நிதர்சன்

**மூன்றாம் சாமம்** - தேனினால் திருமஞ்சனம் செய்து, வெள்ளை கம்பளி ஆடை சாற்றி, நெய் விளக்கேற்றி, அமுதாக பாயாசம், மாதுளம்பழம் படைத்து, இலிங்க புராணம் ஓதி அறுகு, தாழம் பூ கொண்டு அர்ச்சனை இடம்பெற்றது. இசை அர்ச்சனையாக முழவிசை மற்றும் சிவன் போற்றித் துதி இடம்பெற்றது. வழங்கியோர்கள் பு. கோபிசாந், த. ரமணிகாந், மிருதங்கம் - ந. நந்தகுமார், ஸ்ரீ. நிதர்சன்

**நான்காம் சாமம்** - கரும்புச் சாற்றில் திருமஞ்சனம் இடம்பெற்று, பச்சை ஆடை சாற்றி, நல்லெண்ணெய் விளக்கேற்றி, அமுதாக கோதுமை, சக்கரை, நெய் சேர்த்த பலகாரமும் எல்லாவகை பழங்களும் படைக்கப்பட்டு, போற்றித் திருத்தாண்டகம் ஓதி பூக்களால் அர்ச்சனை இடம்பெற்றது. இசை அர்ச்சனையாக குழலிசையை க. தேசிகன், மிருதங்கம் - ந. நந்தகுமார் ஆகியோர் வழங்கியிருந்தனர்.

மேலும் ஒவ்வொரு சாமப் பூசையிலும் 108 போற்றி கூறி அர்ச்சனையும் இடம்பெற்றது. சிவப்பேற்றினைத் தந்திடும் பெருஞ்சிவனிரவில் நடுச் சாமப் பூசையின் போது அடியார் பெருமக்கள் அனைவரும் ஐம்பூதநாதருக்கு நீர் ஊற்றி வழிபாடு ஆற்றியிருந்தனர். பூசை நிறைவில் அடியார் பெருமக்கள் அனைவருக்கும் அமுது செய்வித்தலும் இடம்பெற்றது. மேலும் தென்னாடு அறநெறி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தது.

திருச்சிற்றம்பலம்

# வாரிவனத்தில் பெருஞ்சிவனிரவன்று போதொடு நீர்சுமந்து ஏத்தி ஊர்வல வழிபாடு




“மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப் போதொடு நீர்சுமந்து ஏத்திப் புகுவார்”

சாவகச்சேரி பேருந்து நிலைய நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அருள்மிகு வாரிவனேசர் திருக்கோயிலில் பெருஞ்சிவனிரவு வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றிருந்தது. நான்கு சாமப் பூசைகளும் திருமஞ்சனங்களுடன் சிறப்பாக இடம்பெற்றிருந்தது. சாவகச்சேரி வாழ் மக்கள் பெருமளவானோர் இவ்வழிபாட்டில் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இம்முறை புதிதாக பெருஞ்சிவனிரவு ஊர்வல வழிபாடு தொடக்கி வைக்கப் பட்டிருந்தது. அடியார் பெருமக்கள் அனைவரும் சோழர் கால வாரிவனேசர் திருக்கோயில் கிணற்றில் தீர்த்தம் எடுத்து சிவபுராணம் பாடியவாறு நகர்வலம் வந்து வரிவனேசப் பெருமானுக்கு நீர் ஊற்றி வழிபாடு ஆற்றி இருந்தனர். ஆதிகால அப்பனின் தீர்த்தத்தை தங்கள் திருக்கரங்களினாலே எடுத்து ஊற்றி அனைவரும் பிறவிப் பாவங்கள் நீங்கி பெரும் பேறுற்றிருந்தனர். மேலும் அடியார் பெருமக்கள் அனைவருக்கும் பூசை நிறைவில் அமுது செய்விக்கப்பட்டது.

பிரமனும் மாலும் பிரானே நான் என்ன
பிரமன் மால் தங்கள் பேதமையாலே
பரமன் அனலாய் பரந்து முன் நிற்க
அரன் அடி தேடி அரற்றுகின்றாரே

- திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்

# சைவ மாணவர் சபையின் புதிய தலைவராக சிவத்திரு. வ.தமிழரசன் தெரிவு செய்யப்பட்டார்



மாணவர்களினூடாக சைவம் வளர்க்கும் நோக்கோடு கடந்த ஐந்து வருடங்களாக செயற்பட்டுவரும், தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் சைவ மாணவர் சபையின் ஆண்டு பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த மாசித் திங்கள் 5ம் நாள் (17-02-2023) வெள்ளிக்கிழமை இடம்பெற்றிருந்தது.

இக்கூட்டமானது தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயில் வழிபாட்டினை தொடர்ந்து, தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் நிறுவுனர் சிவத்திரு. திருவம்பலம் தென்னவன் அவர்கள் தலைமையில் இடம்பெற்றிருந்தது. இக்கூட்டத்தில் பழைய கணக்கறிக்கைகள் கையளிக்கப்பட்டு, நிலுவை திட்டங்கள் முன்வைக்கப்பட்டு அதற்கான தீர்மானங்களும் முன்வைக்கப்பட்டன. தொடர்ந்து நிர்வாகத் தெரிவு இடம்பெற்று, புதிய தலைவராக சிவத்திரு. வ.தமிழரசன் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார். சிவத்திரு. வ. தமிழரசன் அவர்கள் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் நிறுவுனர் முன்னிலையில் இறையருளோடு தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டார். தொடர்ந்து ஏனைய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

**புதிய நிர்வாகக் குழு விபரம்**

**தலைவர்** - சிவத்திரு. வ.தமிழரசன்
**உப தலைவர்** - சிவத்திரு. தி. கௌரீசன்
**பொதுச் செயலாளர்** - சிவத்திரு.ஜீ.செந்தமிழாதன்
**நிர்வாக் செயலாளர்** - சிவத்திரு. ந. விண்ணரசு
**பொருளாளர்** - சிவத்திரு. வி. நிலவன்
**துணைப் பொருளாளர்** - சிவத்திரு. சி. கஜீவன்

மேலும் யாப்பு சீர்திருத்தம் மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் போன்றன கலந்துரையாடப்பட்டு பொதுக்கூட்டமானது இறையருளோடு நிறைவடைந்திருந்தது.

திருச்சிற்றம்பலம்

# திருக்கேதீச்சரத்தில் தூய்மையாக்கல் திருப்பணி

பல்லாயிரக்கணக்கான சைவ அடியார்களின் சிவ வழிபாட்டிற்கு உரிய கோயிலாகிய திருக்கேதீச்சரத்தில் பெருஞ்சிவனிரவு விழாவை முன்னிட்டு வடமாகாண நீர்ப்பாசன திணைக்களத்தினால் கடந்த மாசித் திங்கள் 4ம் நாள் (16-02-2023) வியாழக்கிழமை சிரமதானம் ஏற்பாடு செய்யப்பட்டு இடம்பெற்றிருந்தது.

திருக்கேதீச்சரத்தின் பாவம் வினை அறுக்கும் பலாவியின் கரையில் சுத்தம் செய்யும் பணிகள் மற்றும் நிறப்பூச்சும் அடிக்கப்பட்டது. இத்துப்பரவாக்கல் திருப்பணியில் வடமாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் ஐம்பதுக்கும் மேற்பட்ட பணியாளர்கள், தென்னாடு சார்பாக நான்கு அடியார்கள், இலங்கை காவல் துறையை சார்ந்த நான்கு பேர்களும் கலந்து கொண்டு செயற்பற்றிருந்தனர்.

நத்தார்படை ஞானன்பசு வேறிந்தனை கவுள்வாய்
மத்தம் மத யானை உரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு, பாலாவியின் கரைமேல்,
செத்தார் எலும்பு அணிவான் திருக்கேதீச்சரத்தானே

- சுந்தரர்

திருச்சிற்றம்பலம்






சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# அடையாளம் காப்போம்!

அடையாளங்களைத் தொலைத்த ஒரு இனத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும்? என்ற கேள்விக்கு, உலகில் திரிபடைந்த கலாசார கோலங்களோடு சுயமிழந்து வாழும் பல இனக்கூட்டங்களை நாம் உதாரணம் காட்டலாம். எமக்கான அடையாளம் என்பது, எமது முகம்! அந்த முக அழகோடு தான் நாம் இந்த உலகில் தோன்றமுடியும். சீர்படுத்தப்பட்ட செழுமையான ஒரு அடையாளமும், பண்பட்ட நேர்த்தியான அறிவியல் பூர்வமான இன்னமொரு அடையாளமும் தமிழ் இனத்திற்கு உண்டு. அது தமிழ்மொழியும், சைவநெறியும் ஆகும். இறைவனால் அருளப்பட்ட இவையிரண்டும் உலகில் மிக அழகான அறிமுகம் உள்ளவர்களாக எம்மைக்காட்டும். பிறக்கும் போதே அங்கனம் அடையாளத்தோடு பிறந்த நாம் இடையில் அதனைத் தொலைப்பது என்பது எவ்வளவு முட்டாள் தனமானது என உணரவேண்டும்.

**“ஆற்றிலே புளி கரைத்திட்டோம், ஐயோ,
அருமருந்தன்ன தமிழினை அறியாது கெட்டோம்”** என்கின்றார் நவாலியூர் சோம சுந்தரப்புலவர்.

**“வாது செய்து மயக்கும் மனத்தராய்
ஏது செல்லுலீராகிலும் ஏழைகாள்
யாதோர் தேரர் எனப்படுவார்க்கு எலாம்
மாதேவன் அலால் தேவர் மற்றில்லை”** என்கின்றார் திருநாவுக்கரச நாயனார்.

எனவே சைவமும் தமிழும் அருமருந்தான எம் முதுசங்கள் என்பதை அறிந்து அவற்றின் அடையாங்களை நாமும் பேணி எம் அடுத்த தலைமுறைக்கும் கடத்தும் பணியை இன்று நாம் செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

குருந்தூர் மலை முதலிய தமிழர்களின் புராதன வரலாற்றோடு தொடர்புடைய நிலங்களும் தொன்மங்களும் கைக்கொள்ளப்படுவதைக் கண்டும் காணாமலும் இருக்கும் நாம் வரலாற்றின் மிகப்பெரிய பிழையைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை உணர வேண்டும். எமக்கான வரலாற்று எச்சங்களும் தொன்மங்களுமே எம்மைப் பற்றிய செய்தியை தலைமுறைகள் தாண்டி அறிவிக்கும், எம் மூதாதையர் விட்டுச் சென்ற இலக்கிய ஆதாரங்களைப் போல், அகழ்வுகளில் கிடைக்கும் தடய ஆதாரங்களையும் பாதுகாக்க வேண்டியது நம் கடனே ஆகும்! இலக்கிய ஆதாரங்களுக்கு சான்று தருபவை அவையே! எனவே தோண்டும் போது கிடைத்த தொன்மைகளை அழிப்பதையோ, மறைப்பதையோ அனுமதித்தல் ஆகாது. பெரும்பாண்மை மக்கள் அனுராதபுரம், பொலன்னறுவை முதலிய தம் பழைய நகரங்களை அதே தன்மை கெடாமல், நவீன நகரமயமாக்கலுக்கு உட்படவிடாமல் தனியே அவற்றையும் பாதுகாப்பதை நாம் பார்க்கின்றோம். அவை அனைத்தும் அவர்களுக்கான ஒரு வரலாற்றை உருவாக்கி அடுத்த தலைமுறைக்கு கையளிப்பதற்காகவே என்பதை நாம் உணர வேண்டும்.

இவ்விடயத்தில் இலங்கையில் வாழும் தமிழர்களாகிய நாம் எத்தனை தூரம் அடையாளங்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கின்றோம் என்கின்ற கேள்வி இயல்பாக எழுகிறது. எமக்கே உரிய பாரம்பரியமான ஈழத்து கோயில்களின் முகப்புகளைக்கூட இடித்து விட்டு சீமெந்து கூடாரங்களாக மாற்றிய பெருமை எமக்கல்லவா உண்டு!

இந்த மண்ணில் தமிழர்கள் ஆதியிலிருந்தே வாழ்ந்தார்கள் என்பதற்கு அடையாளமாக எந்த தொல்லியல் சின்னத்தை நாம் நம்முடைய அடுத்த தலைமுறைக்கு சுட்டிக் காட்டுவதற்காக வைத்திருக்கின்றோம் என்று எண்ணினால் நம் இயலாமை புலப்படும்.

எனவே இனியேனும் புதிதாக நாம் அமைக்கின்ற நம் வாழ்விடங்கள், தொழில் நிலையங்கள், கல்விக்கூடங்கள் அத்தனையிலும் எமது சமயம் பண்பாடு சார்ந்த சின்னங்களை நிறுவ வேண்டும்! நந்தியின் சிலைகளை அமைத்தும் ஓம் எனும் குறியீட்டை பொறித்தும் நம்முடைய வரலாற்றை வெளி உலகிற்கு காட்ட வேண்டியது நம் ஒவ்வொருவருடைய உயிரான கடமையுமாகும்!

நமது ஆலயங்களில் காணப்படுகின்ற விக்கிரகங்கள் பழமையான பித்தளை பொருட்கள் முதல் அத்தனையிலும் வரலாறு பொதிந்திருக்கிறது. இன்றைக்கு வடபுலத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட ஆலய பொருட்களும் அழகியல் வேலைப்பாடுகளோடு கூடிய தமிழர்களின் கைவினை எச்சங்களும், தென்பகுதிகளில் அமைந்திருக்கின்ற விருந்தினர் விடுதிகளில் காட்சிப் பொருளாக்கப்பட்டு அழகுகாக வைக்கப்பட்டிருப்பதை பார்க்கின்றபோது பணத்துக்கு எம் பண்பாட்டு எச்சங்களைக்கூட கொடுத்திருக்கின்றோம் என்கின்ற கவலை தான் எழுந்து நிற்கிறது.

எனவே இனியேனும் எம் அடையாளங்களை காக்க, அவற்றைப் பேண, இவற்றுக்கெல்லாம் ஒரு அமைப்பை அமைத்து இயங்க, அதற்கு நாம் நம்மால் இயன்ற உதவிகளை வழங்க, சைவத் தமிழர்கள் எல்லோரும் இந்த மண்ணில் ஒன்றாக திடசங்கற்பம் கொள்வோமாக!

**திருச்சிற்றம்பலம்**




சிவத்திரு.யாழவன் சிவவேதன்,
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org



# இறைநம்பிக்கையும் நம்பிக்கையீனமும்

ஒரு பொருள் பற்றி இருவிதமான விவாதங்கள் உலகத்தில் தொன்று தொட்டு நிலவி வருகின்றன. அந்த இருவிதமான பார்வைகளும் இரு வேறுபட்ட கோணங் களில் இருந்து ஒற்றைப் பொருளை தான் பார்க்கின்றன. இறைநம்பிக்கையும் இதற்கு விதிவிலக்கானதொன்றல்ல. என்று ஆத்திகமிருந்ததோ அன்றே நாத்திகமும் இருந்தது என்பது சான்றோர் துணிபு. அதிலும் குறிப்பாக தமிழ்சூழல் வரலாற்றிலே நாத்திகமென்பது உலோகாயுதம் என்ற தனிச்சமயப்பிரிவாக மாறும் அளவிற்கு பெருவளர்ச்சி கொண்டிருந்தது என்பது வெளிப்படை. நாத்திகம் என்பது தனியானதொரு பொருளல்ல. ஆத்திகம் என்ற பொருளின் எதிர்ப்பிரதியே நாத்திகம். ஆத்திகம் என்ற ஒன்றிலிருந்துதான் நாத்திகம் கிளர்ந்தெழுந்தது. நாத்திகமென்ற ஒன்று தமிழ்ச்சூழலில் பெருவளர்ச்சி கண்டிருக்கின்றது என்றால் அந்த வளர்ச்சிக்கு அதைவிடப் பேரளவு ஆத்திகம் நிலவியிருத்தல் வேண்டும். ஏனெனில் இருக்கிறது என்று சொல்லப்பட்ட பொருளைத்தான் மறுக்கமுடியுமே தவிர இல்லாத பொருளை, சொல்லப்படாத பொருளை மறுப்பது முட்டையில் முடி பிடுங்கலை ஒக்கும். “இல்லது தோன்றாது உள்ளது அழியாது” என்ற சற்காரிய வாதத்தின் மூலம் நாம் அறியலாம்.

போற்றித்திருவகவலிலே மாணிக்கவாசகப் பெருமான் கூட நாத்திகத்தை,

**“ஆத்தமானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்”**

என்று ஆவணப்படுத்துகின்றார். ஆக இறையடியார் காலத்திலும் நாத்திகமென்பது தன் தன்மையோடு நின்றிருக்கின்றது. என்பதை ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். நெல்லு நடுகின்றபோது நெல்லுக்குள் புல்லும் வளரும். புல்லை முழுவதுமாக இல்லாமற் செய்ய வேண்டும் என்றால் நெல்லை முதலில் நிறுத்த வேண்டும். புல்வருகின்றதென்று நெல்லைப் பயிரிடாமல் விடுவாரோ யாராவது. புல்லைப் போலத்தான் நாத்திகமும். ஆத்திப் பயிர்ச்செய்கையில் விளையும் களைகள் அவை. களைகளே வரக்கூடாது என்றால் பயிரையே அழித்தல் வேண்டும். பயிரை அழிக்கவில்லையாயின் களையும் அழியாது ஆகவே நாத்திகத்தை அழிப்பதென்பது இல்லாத விடயம். ஆனால் புற்களைக் கட்டுப்படுத்துவது போல நாத்திகத்தை குறைத்தழிக்கலாம். இதைத்தான் சைவம் எனும் பயிர் வளர்க்க வந்த அருளாளராகிய உழவர்களும் காவலர்களோடு காலம் காலமாகச் செய்திருக்கிறார்கள். இன்றைய காலத்திலும் இத்தேவை மிகுந்து காணப்படுகிறது. எளியேனுடை பார்வையில் ஐந்து வகையான நாத்திகர்கள் காணப்படுகின்றார்கள்.

1. **தத்துவ ரீதியாக இறைவனை மறுப்பவர்கள்**
2. **அறிவியலைக் காரணம் காட்டி இறைவனை மறுப்பவர்கள்**
3. **தம்வாழ்வில் நடந்த அல்லது பார்த்த துர்நிகழ்வின் காரணமாக இறைவனை நம்ப மறுப்பவர்கள்**
4. **சமூக ஏற்றத் தாழ்வு, மதச்சண்டை போன்ற பல்வேறு சீரற்ற நிலைமைகளுக்கு காரணம் கடவுளே எனக்கூறி அவனிருப்பை மறுப்பவர்கள்**
5. **இயல்பாகவே இறைவன் மீது ஈடுபாடின்மையால் அவனிருப்பை ஏற்காதவர்கள்.**

இவற்றை விட மேலதிக காரணங்களும் இருக்கக்கூடும். பின்வரும் காரணங்களில் ஒன்றையோ, ஒன்றிற்கு மேற்பட்ட காரணங்களையோ அடிப்படையாக கொண்டே இறைமறுப்பாளர்கள் தம் நாத்திக மனநிலையை வளர்க்கின்றனர். நாத்திகத்தைத் களையவேண்டுமென்றால் அவர்களின் வழியினுடாக அவர்களை அணுகுவதன் மூலமே களையமுடியும். இன்றைய காலத்தில் மலிந்து கிடக்கின்ற நாத்திகர்களை, தீயவர்களைப் போல நடத்தாது அவர்கள் இயல்பில் ஒருவரே, பார்வையிலே தான் வேறானவர் என்ற உண்மையைப் புரிந்து அவர்களுக்கேற்ற வகையில் அவர்களை அணுகினால் சைவப்பயிர் தழைக்குமென்பது திண்ணம்.

**அழகனார் அழகியோடு கோயில் கொண்டு அமர்ந்ததாலும்
பழவினை நீக்கும் தெய்வ நீற்றொளி பாத்தலாலும்.
நளிகடல் உலகை இந்நாள் நலித்திடு நாத்திகப்போர்
தமிழகர் காட்டி இங்கே குனிந்திடாது அகன்றதன்றே** - ஈழத்து சிதம்பர புராணம்.

**திருச்சிற்றம்பலம்**

# யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை "மங்களநாதர்" திருக்கோயிலின் முதலாவது பெருஞ்சிவனிரவு விழா





### "தானேவந்து எனது உள்ளம் புகுந்தடி அடியேற்கு அருள் செய்தான்"

சைவத்தினையும், தமிழினையும் பேணிப் பாதுகாக்கவும், மேன்மையுறச் செய்யவும் எடுத்த விடாமுயற்சியின் விளைவால் தோன்றிய யாழ் இந்து ஆரம்ப பாடசாலையின், நோக்கங்களை மீண்டும் வலுப்படுத்தவும், இளமையிலேயே குழந்தைகளுக்கு சைவநெறியின் ஆதித் தன்மையையும், தனித்துவத்தினையும், பெருமைகளையும் சிவவழிபாட்டின் ஊடாகப் பெற்றுக்கொடுப்பதற்கும், அத்துடன் மாணவர்கள் அறிவுடன் சேர்த்து ஞானத்தினையும் பெற்றிடவும், மேலாக அவர்கள் மத்தியில் ஏற்றத் தாழ்வு அற்ற முறையில் வழிபாட்டு முறையினை அறிமுகப்படுத்தி அவர்களாகவே எங்கள் பரம்பொருளை போற்றி வழிபடும் சந்தர்ப்பத்தினைக் கொடுக்கவும், பாடசாலையில் சிவனுக்கு ஒரு கோயில் வேண்டும் என்ற சிந்தனையின் வெளிப்பாடே **"மங்களநாதர்"** திருக்கோயிலின் தோற்றமாகும்.

திருவருள் உதவியுடன் அப்படியான ஒரு கோயிலை யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் அமைக்கவேண்டும் என்ற எண்ணத்தினை, கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட நிறுவுனரும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவனும் ஆகிய சிவத்திரு. குணரத்தினம் பார்த்தீபன் அவர்களால் சைவ மாணவர் சபையின் ஊடாக பாடசாலை நிர்வாகத்தினரிடம் விண்ணப்பம் முன்வைக்கப்பட்டது.

அவன் அருளாலே தான் அவனை வணங்க வேண்டும் என்பதற்கு இணங்க, **"தானேவந்து எனது உள்ளம் புகுந்தடி அடியேற்கு அருள் செய்தான்"** என்ற மணிவாசகரின் வரிகள் போல், இந்த பெரும் சிவப்பேற்றின் வழி கோயில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் விழா மார்கழித் திங்கள் 16ம் நாள் (31/12/2021) சிவனுக்குரிய கழுவாய் (பிரதோசம்) தினத்தில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. இதன்போது அதிபர், யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர், கல்வியமைச்சின் செயலாளர், வேலன் சுவாமிகள், தென்னாடு செந்தமிழ் சிவமட நிறுவுனர், சைவ மாணவர் சபை நிர்வாக உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என்று பலரும் பங்குபற்றி சிறப்பித்தனர்.

இந்த உயரிய சிவப்பணிக்கான நிதியுதவியினை கொக்குவில் தென்னாடு சிவமட நிறுவுனர் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் அவர்களின் வேண்டுகோளை, முற்பிறவியின் தவப்பயனால் கோண்டாவிலைச் சேர்ந்த, தற்போது சிட்னியில் வசிக்கும், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை பழைய மாணவர் சிவத்திரு. சுபதாசன் சுப்ரமணியம் மற்றும் அவர் துணைவியார் திருமதி. சித்ரா சுபதாசன் அத்துடன் அவர்களின் பிள்ளைகளான சுகாசன் சுபதாசன் மற்றும் சுகானன் சுபதாசன் அவர்கள் மனப்பூர்வமாக ஏற்றுகொண்டனர்.

மிகவும் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலவிய சூழ்நிலையிலும், மின்சார தடைகள் மற்றும் பல இன்னல்கள் மத்தியிலும், இந்தக் கோயிலை முற்றுமுழுதாக கிளிநொச்சியை சார்ந்த சிவத்திரு. ஆனந்தன் வினோத் குழுவினர் சிறப்பாக வடிவமைத்து கட்டி முடித்து கொடுத்தார் என்பதும் இறைவன் திருவருளே. அதற்கு முழு ஆதரவுடனும் முழு மனதுடனும் பெருந்தொகைப் பணத்தினை வழங்கி வேலைகளைத் துரிதமாக முடித்துத் தர சுபதாசன் குடும்பத்தினர் எடுத்த முயற்சிகளும் நினைவு கூறப்படவேண்டும்.

மேலும் உலகின் முதல் கோயில் மற்றும் ஆதி சிதம்பரம் என்று போற்றப்படும், இராவணன் மற்றும் மண்டோதரி அவர்களின் திருமணம் நடைபெற்ற, சிவனின் ஊர் எனப் போற்றப்படும் உத்தரகோசமங்கை மங்களநாதரினை, தென்னடாகிய சிவபூமி இலங்கையின் யாழ்ப்பாணத்தில் எழுந்தருளச் செய்ய திருவருள் கைகூடிய பலனால், திருவாசகத்தில் முப்பத்தியெட்டு இடங்களில் போற்றப்படும் **"மங்களநாதர்"**, யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் எழுந்தருளியுள்ளார் என்பது எமக்கு கிடைத்த பெரும்பேறாகும்.

இப் புத்தெழில் கோலத்தில் புத்தெழுச்சி பெற்று, அருள்மிகு மங்களநாதர் திருக்கோயில் என்ற பெயரில், செந்தமிழ் மந்திரங்கள் ஓதி வேள்விகள் ஆற்றிட மங்களநாதருக்கு கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழாவானது, கீழறை (பிலவ) ஆண்டு, மீனம் நல்லோரை பங்குனித் திங்கள் 28ம் நாள் (11-4-2022) திங்களன்று நல்வேளையில் கடவுள் மங்கல நன்னீராட்டு நடைபெற்றது. இந்நாள் தவத்திரு. யோகர் சுவாமிகளின் குருபூசை நாள் என்பதும் குறிப்பிடத்தக்கது. நல்ல இறை சிந்தனையாளர்களின் சிந்தனைகள் வருடங்கள் சென்றாலும் முளைக்கும் என்பதனை இது எடுத்துக் காட்டுகிறது.

இந்த கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழாவிற்கு இந்தியாவின் தமிழ்நாட்டின் தமிழ் ஆதீனமான பேரூர் ஆதீன சுவாமிகள் சீர்வளர்சீர் மருதாசல அடிகளார் மற்றும் தருமபுரம் ஆதீனம் தென்மண்டல கட்டளை விசாரணை தம்பிரான் சீர்வளர் திருஞானசம்பந்த சுவாமிகளும் வருகை தந்து சிறப்பித்தனர்.

அன்று தொடக்கம் இன்று வரை அதிபர் சிவத்திரு. பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்களின் கூடுதல் இறை பத்தியினால் மங்களநாதப் பெருமான் மங்கலம் பொங்கவே காணப்படுகின்றார். மாணவர்கள், ஆசிரியர்களின் ஈடுபாடும் அதிகமாகவே காணப்படுகின்றது. அதிபருடைய சிறப்பான கட்டமைப்பினாலே மாணவர்களுக்கான பூசைகள் வகுக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் பெரு எண்ணிக்கையான மாணவர்கள் மங்களநாதருக்கு நீர் ஊற்றி வழிபடுகின்றார்கள். தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தினால் செந்தமிழ் பூசகர் ஒருவர் ஏற்பாடு செய்யப்பட்டு தினமும் மாணவர்கள் மங்களநாதர் பூசையுடன் தங்கள் கல்வியை தொடங்குகின்றார்கள்.

இன்றைய நாட்களில் உலகளவில் பெரிய சாதனையாளர்களின் ஆரம்பப் புள்ளியாக இருக்கின்ற யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில், மாணவர்கள் சிவத்துடன் வளர்க்கிறார்கள். ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் மங்களநாதரை தொட்டு நீர் ஊற்றி, பூ வைத்து வழிபடுகின்றார்கள்.

தொழிநுட்ப காலத்தில் இன்றைய பிள்ளைகள் சைவத்தை மறந்து விட்டார்கள், பண்பாட்டை மறந்து விட்டார்கள் என்று, இன்றைய பெரியோர்கள் தாங்களை பெரியோர்களாக




காட்ட கூறித் திரிகின்றார்கள் போல. யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் வந்து பாருங்கள் பிள்ளைகள் சிவனுக்கு தொண்டாற்றிட போட்டியிடுவதை! என்னதான் தொழிநுட்பமயமானாலும் இது சைவம் வளர்த்த பெரியோர்கள் வாழ்ந்த மண் தானே! தொழிநுட்ப மாற்றத்தால் நெல்லை புல் ஆக்க முடியும் என்றால் அது ஏற்றுக்கொள்ள முடியாது தானே. பெரியோர்கள் நாங்கள் எங்கள் பண்பாட்டை கடத்த என்ன செய்தொம் என்ற கேள்வியை ஒவ்வொருவரும் எங்களை நாங்களே கேட்டுக்கொண்டோமானால் எங்களிடமே அதற்கு பதில் இருக்காது. நெல்லை பயிரிட்டால் அதற்கு வரம்பைக் கட்டி, நீர் ஊற்றி பாதுகாக்க வேண்டும். அத்தகைய செயற்பாட்டின் ஆரம்பப் புள்ளியாகவே யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில் மங்களநாதரின் தோற்றம் அமைந்துள்ளது. சமூக கருத்துக்களுக்கு மத்தியில் சைவம் தன்னை தலையாய் கொண்ட சைவப்பற்றாளர்களை எங்களுக்கு மங்களநாதப்பெருமான் தந்தருள்வார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

### முதலாவது மங்களநாதரின் பெருஞ்சிவனிரவு

யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மங்களநாதர் திருக்கோயிலில் சிவனுக்குரிய விசேட தினங்கள் மிகச் சிறப்பாக இடம்பெறுகின்றன. அந்தவகையில் கடந்த பெருஞ்சிவனிரவானது அனைவராலும் பேசப்படுகின்ற வகையில் சிறப்பாக நடந்தேறியிருந்தது. இப்பெருஞ் சிவனிரவை முன்னிட்டு சமயப் போட்டிகள் நடைபெற்றிருந்தன. தரம் ஒன்று தொடக்கம் மூன்று வரையான மாணவர்களுக்கு தேவாரம் ஓதுதலும், தரம் நான்கு, ஐந்திற்கு ஐம்பெரும்புராணம் (பஞ்சபுராணம்) ஓதுதலும்



இடம்பெற்றிருந்தது. மேலும் அனைத்து மாணவர்களுக்கும் சிவபுராணம் ஓதுதல் போட்டிகளும் இடம்பெற்றிருந்தது. மாணவர்கள் பெரும் ஆர்வமாக பங்குபற்றியிருந்தார்கள். சிவன் இருக்க பயமில்லை என்று தரம் ஒன்று மாணவர்களும் சிவபுராணம் ஓதி போட்டியிட்டார்கள். மூன்று வயதுடையோனை பாட வைத்த இறைவனுக்கு இவர்களை பாட வைப்பதா கடினம்! கிட்டத்தட்ட 585 மாணவர்கள் பெருஞ்சிவனிரவு போட்டிகளில் பங்கு பற்றியிருந்தார்கள்.

இம்முறை சனிக்கழுவாயுடன் வந்திருந்த பெருஞ் சிவனிரவானது சிறப்புக்கு உரியதாகும். அதற்கு ஏற்றால் போல மிகச் சிறப்பான முறையிலே மங்களநாதப் பெருமானுக்கு வழிபாடுகள் இடம்பெற்றிருந்தன. நான்கு சாமங்களும் திருமஞ்சனம் ஆற்றி, திருமுறைகள் ஓதி சிறப்பாக வழிபாடு இடம்பெற்றிருந்தது. பெருமளவான மாணவர்கள் கலந்து மங்களநாதர் திருவருளைப் பெற்றிருந்தார்கள். மேலும் அயல் பாடசாலை மாணவர்கள், அயல் வாழ் அடியார் பெருமக்கள் என பலரும் மங்களநாதரை காண வந்திருந்தார்கள். அனைவருக்கும் எம்பெருமானுக்கு நீர் ஊற்றி வழிபடும் வாய்ப்பும் கிட்டியிருந்தது. இப்பூசை வழிபாட்டை பாடசாலை இந்துமாமன்றம் பொறுப்பெடுத்து நடாத்தி இருந்தது.


மேலும் பெருஞ்சிவனிரவு போட்டிகளுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம்பெற்றிருந்தது. போட்டியிட்ட மாணவர்களில் 105 மாணவர்கள் முதல் மூன்று இடங்களை பெற்று வெற்றியீட்டியிருந்தனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு திருவாசகப் புத்தகமும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது. அத்துடன் போட்டியிட்ட அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் நல்லூர் மற்றும் கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சிவத்திரு. ஞா. சிவநேசன், தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் நிறுவுனர் சிவத்திரு. தென்னவன் பார்த்திபன், யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் சிவத்திரு. அனோரன் ஆகியோர்கள் கலந்து பரிசில்களை வழங்கி சிறப்பித்திருந்தனர்.

இப்பெருஞ்சிவனிரவு இறையருளோடு சிறப்பாக நடந்தேறியமைக்கு பெருந்தொகை பணத்தை வழங்கி உதவியிருந்தது, மங்களநாதர் திருக்கோயில் நிறுவுனர் அருட்கொடையாளி சிவத்திரு. சுப்பிரமணியம் சுபதாசன் அவர்களே என்பது நினைவு கூறப்படவேண்டிய விடயமாகும்.

திருச்சிற்றம்பலம்

**தொகுப்பு - சிவத்திரு. தென்னாடு நிலவன்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே** - திருமந்திரம்

### தென்முகக்கடவுளாகிய (ஆலமர் கடவுள்) தட்சிணா மூர்த்திக்கு மஞ்சள் ஆடையும், கடலை மாலையும் சாத்தி வழிபடலாமா?

இல்லை. தென்முகக்கடவுள் வேறு வியாழக் கடவுள் என்னும் தேவர்களின் குரு வேறு. தென்முகக்கடவுள் வடிவம் என்பது சிவபெருமானின் வடிவங்களில் ஒன்றாகும். சனகர் முதலிய நால்வருக்கும் சிவஞானத்தினை உனர்த்தியருளிய சிவவடிவமே தென்முகக்கடவுள் வடிவமாகும். ஒன்பான்கோள்களில் (நவக்கிரகங்களில்) ஒன்றாக விளங்கும் வியாழக் கடவுள் என்பவர் தேவர்களிற்குரிய குருவாகும். தேவகுருவாகிய வியாழக் கடவுளுக்கு கூறப்பட்டுள்ள மஞ்சள் ஆடையினை தென்முகக்கடவுளும் பரமகுருவுமாகிய சிவபெருமானுக்கு அணிவிப்பதும் கடலை மாலை அணிவிப்பதும் பெரும் தவறாகும். தென்முகக்கடவுளுக்கு வெள்ளை ஆடையே சைவ நூல்களில் கூறப்பட்டுள்ளது.

வியாழக் கடவுளுக்கும் தென்முகக்கடவுளுக்கும் நேரடிச் சம்பந்தம் ஏதும் இல்லை. நம்வினைகளுக்கு ஏற்ப பலன்களினை ஊட்டுபவர் சிவபெருமானே என்பதினாலும், அதற்காக சிவபெருமானின் அதிட்டித்தலில் இயங்குபவர்களே ஒன்பான்கோள் கடவுள்கள் என்பதினாலும், முழுமுதற் கடவுள் சிவபெருமானே என்பதினாலும், கோள் மாற்றங்களினால் தீவினை ஏற்படுமாயின், அதற்காக நாம் வழிபடவேண்டியது சிவபெருமானையேயாகும். எனவே, வியாழ தாக்கங்கள் (தோசங்கள்) மட்டுமல்ல, எந்த கோள் தாக்கங்கள் ஆயினும் சிவவழிபாடே நம்மை உய்விக்கும். நளனினைப் பீடித்திருந்த சனைச்சரத்தாக்கம், திருநள்ளாறு திருத்தலத்திற்குச் சென்று நளன் சிவபெருமானை வழிபட்டதினாலேயே ஒழிந்தது. நளன் சனைச்சரனை வழிபட்டதாக எங்கும் எச்செய்தியும் இல்லை. அதுபோல், வியாழனின் தாக்கத்திற்கு சிவபெருமானையே வழிபட வேண்டும். ஆனால் சிவபெருமானை வியாழக் கடவுளாக்கி வழிபடுதல் பெருந்தவறாகும். அதிலும் ஞானகுருவினை தேவகுருவாக்குதல், பெருந்தெய்வத்தினை சிறுதெய்வமாக்கிய கேட்டினையே கொடுக்கும்.

### தமிழர் மத்தியில் பல நவீன சிறுதெய்வ வழிபாடுகள் பெருகிவருகின்றனவே.... அது தவறா?

நவீன சிறுதெய்வ வழிபாடும் நவீன மனித வழிபாடும் பெருகி வருவது கவலையளிக்கிறது.

**யாதொரு தெய்வம் கொண்டீர்**
**அத்தெய்வ மாகிஆங்கே**
**மாதொரு பாகனார்தாம்**
**வருவர் மற்றத் தெய்வங்கள்**
**வேதனைப்படும் இறக்கும்**
**பிறக்கும் மேல்வினையும் செய்யும்**
**ஆதலான் இவை இலாதான்**
**அறிந்து அருள் செய்வன் அன்றே!** - சிவஞானசித்தியார்

இப்பாடலில் முதல் இருவரிகளினையும் வெட்டியொட்டி, எந்தத் தெய்வ வழிபாடும் சிவவழிபாடே என்று ஏமாற்றும் வித்துவான்கள் அதிகம் உளர். சிறுதெய்வங்களெல்லாம் வேதனைப்படும், இறக்கும், பிறக்கும், மேல்வினையும் செய்யும் என்றும், அவற்றினால் எந்த நன்மையும் நமக்குச் செய்யமுடியாதென்றும், அறியாது உயிர்கள் செய்யும் சிறுதெய்வ வழிபாட்டினை கருணையினால் சிவபெருமான் ஏற்று அருள்வதினால் அந்தத் தெய்வங்கள் அருள்வதாக சிலர் மயக்கமடைகின்றனர் என்பதுவுமே இப்பாடலின் பொருளாகும். இப்பாடலின் தொடர்ச்சியாக விளங்கும் அடுத்த பாடலினையும் படித்தால் இவ்வுண்மை நன்றே விளக்கமுறும்.

**இங்குநாம் சிலர்க்குப் பூசை**
**இயற்றினால் இவர்களோவந்(து)**
**அங்குவான் தருவார் அன்றேல்**
**அத் தெய்வம் எல்லாம்**
**இறைவன் ஆணையினால் நிற்பது**
**அங்கு நாம் செய்யும் செய்திக்(கு)**
**ஆணைவைப்பால் அளிப்பான்** - சிவஞானசித்தியார்

“இங்கு நாம் சிறுதெய்வங்கள், பெரியோர், உயர்ந்தோருக்கு வழிபாடு செய்தால், அவர்களே அவற்றுக்கான பலன்களை மறுபிறவியில் நமக்குத் தரமாட்டார்கள். எங்கும் உள்ள சிவனே வந்து அருள் செய்வான். எல்லாம் அவன் ஆணை வழியாக நிற்பதுவும் இயங்குவதுமாகையால் அவனே நமக்குப் பயன் தருவான்.” என்பதுவே இப்பாடலின் பொருளாகும்.

**“சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்”** என்று அப்பர்பெருமானும்,

**“புற்றில்வா ளரவும் அஞ்சேன் பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்**
**கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல் பாதம் நண்ணி**
**மற்றும்ஓர் தெய்வந் தன்னை உண்டென நினைந்தெம் பெம்மாற்**
**கற்றிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே”**

என்று மாணிக்கவாசகப்பெருமானும் அருளிச் செய்திருப்பதே சைவசமயத்தார் போற்றவேண்டியது.

இன்று புதுப்புது சாமியார்களும், பாபாக்களும் தமிழரிடம் புகுத்தப்பட்டுக்கொண்டிருப்பதே, சைவசமய வழிபாட்டிலிருந்து தமிழரினைப் பிரித்து, இந்துவென்று பொதுமைப்படுத்தி, தமிழரின் தனித்துவப் பண்பாட்டு விழுமியங்களினை ஒழிக்கும் நோக்கம் குறித்தேயாகும்.

### வீடுகளின் நுழைவாயில்களின் முன் வைத்திருப்பது நந்தியா அல்லது இடபமா ?

நந்தி என்பது சைவசமயத்தில் பல பொருளினைத் தரும் ஒரு சொல்லாகும். அது திருநந்திதேவர் என்னும் சிவசாரூப வடிவினரையும், சிவபெருமானினையும் குறிக்கும் என்பதோடு, சில இடங்களில் இடபத்தினைக் குறிப்பதாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. நந்தி நாமம் நமச்சிவாயவே என்பதில் வரும் நந்தி என்ற சொல், சிவபெருமானினைக் குறிக்கும். சிவசாரூப வடிவினராகிய திருநந்திதேவர் திருக்கயிலாயத்தின் திருவாயிலினைக் காவல்செய்யும் சிறப்புடையவராவர். இவரினைச் சிலர் இடபமுகத்தோடு அமைத்து திருக்கோயில்களில் வழிபாட்டில் வைத்துள்ளனர். அது பெருந்தவறு.



**சிவஞானச் செல்வர்.**
**மருத்துவர்**
**ஈசான பிரதாபன்**
**தேசிகர்**

திருக்கோயிலுள் நுழையும்போது கோபுர வாசலினுள் ஒரு வீதி இருக்கும். அங்கு இருப்பவரே திருநந்திதேவர் ஆவர். அவர் சிவபெருமானினை ஒத்த வடிவம் பெற்ற புண்ணியச்சிறப்பு உடையவர். எனினும் அவருக்கு நீலகண்டம் முதலியன இருக்காது. ஆனால் மான், மழு முதலியனவற்றுடனும் பிரம்புடனும் காட்சியளிப்பார். இவரது அனுமதியில்லாது திருக்கோயிலினுள் நுழைதல் தவறு. திருக்கேதீச்சரம் போன்ற சிவாகமத் திருக்கோயில்களில் இவருக்குரிய வீதி உள்ளது.

இப்போது உங்கள் கேள்விக்கான பதில் இடபம் என்பதுதான் சரி.

### அப்படியானால் இடபமும் நந்தியும் வேறானவையா?

ஓம். இரு சொற்களும் வேறானவை. காலப்போக்கில் இரண்டும் ஒன்றென ஆகிவிட்டது.

இடபம் என்பது சிவபெருமானினைத் தாங்கும் பேறுபெற்ற சிவவாகனமாகும். திருமால், தர்மதேவதை, இந்திரன், பிரமன் முதலியவர்களும் இடபமாக உருவெடுத்து சிவபெருமானுக்கு வாகனமாக விளங்கியமை, திருமுறைகளிலும் புராணங்களிலும் காணப்படுகிறது. இடபம் சிவபெருமானுக்கு வாகனமாகவும் கொடியாகவும் விளங்கும் சிறப்புடையது. பலிபீடத்தோடு இருப்பது நந்தியென்று பொதுவில் அழைக்கப்பட்டாலும், அது இடபமேயொழிய திருநந்திதேவர் அன்று. இடபம் தான் பலிபீடத்தோடு இருக்கிறது என்று இளம் சந்ததியினருக்கு பெற்றோர் சொல்லிக்கொடுங்கள்.

### வீட்டு வாயிலில் இடபத்தின் சிலை வைப்பது நன்மை தருமா?

எருது, பசு இருக்கும் இடத்தில் கொடிய சத்திகள் உள் நுழையாதென்பது தமிழர்களின் நம்பிக்கையாகும். மருத்துவரீதியாகக்கூட இவ்வுண்மை ஏற்றுக்கொள்ளக் கூடியது. சாணத்தினால் மெழுகுவது கிருமிகளினை ஒழிக்கும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டவொன்றே. சித்த வைத்தியத்திலும் எருது பசு என்பவற்றின் சாணம் முதலியனவும், பசுவில் இருந்து பெறப்படும் பால் முதலியனவும் பயன்படுத்தப்படுத்துவது அறிந்தவொன்றே. உழவுத்தொழிலுக்கு எருது இன்றியமையாதவொன்றாக அண்மைக்காலம்வரை விளங்கிவந்தது. இன்றுகூட, இயற்கை உரத்தினை விரும்புவோர் எருதினதும் பசுவினதும் சாணத்தினைப் பயன்படுத்தியே வருகின்றனர். சிவபெருமான் என்றால் செம்பொருள் என்றும், மங்கலம் என்றும் பொருள் என்பதினால், சிவவாகனமாய் விளங்கும் இடபமும் மங்கலப்பொருள் உடையதேயாகும். இப்படி, எருது பசு என்பன தமிழர் வாழ்வில் பண்டுதொட்டு இரண்டறக் கலந்து விளங்கும் சிறப்புடையதென்பதினால், இடபம் மங்கலப்பொருளாகவே விளங்கிவருகின்றது.

எருது என்பதும் இடபம் என்பதும் ஒன்றுதான். இடபம் போற்றப்படுவதால், பசுவும் அதில் அடக்கம். பசு,எருது என்பன மங்கலப்பொருள்களேயாகும். நாம் வாழும் வீடுகளில் மங்கல காரியங்களும் மன அமைதியும் கிடைக்க சான்றோர்கள் இல்லங்களின் முன் மங்கலச் சின்னங்களை அமைத்தார்கள். எனவே, இடபத்தினை இல்லத்தின் வாயில்களில் செதுக்கி, சுதை சிற்பங்கள் அமைத்துப் பேணும் மரபு இலங்கைத் தமிழரிடையே அதிகமாகவுண்டு.

வீட்டு வாயில்களில் வெண்ணிறத்தில் இடபம் அமைய வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தர்மதேவதையின் வடிவாகவும் அனைத்து தேவர்களின் இருப்பிடமாகவும் இடபம் போற்றப்படுவது சைவமரபில் இடபத்தின் உயர்வுக்கு சான்றாகும். எனவே, மங்கலத்தின் அடையாளமாகப் போற்றப்படும் இடபத்தினை இல்லத்தின் வாயிலில் சுதை சிற்பங்களாகவும் ஓவியங்களாகவும் அமைத்துப் பேணும் தமிழர் மரபு போற்றிப்பேண வேண்டியவொன்றாகும். ஒரு வீட்டினைக் கண்டதும் இது சைவரின் வீடு என்று நாம் தெளிந்துகொள்ளவும் இவ்வாறான அடையாளங்கள் உதவும்.

இப்படி, எருது பசு என்பன தமிழர் வாழ்வில் பண்டுதொட்டு இரண்டற கலந்து விளங்கும் சிறப்புடையதென்பதினால், இடபம் மங்கலப்பொருளாகவே சைவத்தில் விளங்கிவருகின்றது. அத்துடன் இது தமிழர்களின் ஆதிப் பண்பாட்டினையும், அதன் வழி வந்த மனிதகுல மூத்தகுடி என்பதனையும் அடையாளமாக விளக்கி நிற்கும். அனைத்து தமிழர்களின் வாயிலிலும் இடபத்தினை வைத்து வளமாக வாழ்வோம்.

**கேட்போம் தெளிவோம் ஊடாக உங்கள் ஐயங்களைத் தெளிய, ஐயங்களை அனுப்பவேண்டிய முகவரி**
**தென்னாடு சிவமடம்,தென்னாடு வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**
**மின்னஞ்சல்** thennavan@thennadu.org
**புலனம்** +94 70 770 1111

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்

### சைவ சமயத்தில் கடவுளின் வடிவங்கள் எத்தகையது?

சிவன் தன்நிலையில் அனைத்தையும் கடந்ததாக இருப்பின் அவனால் உயிர்களுக்கு எத்தகைய பயனும் விளையப் போவதில்லை. உயிர்களின் மேற்கொண்ட கருணையால், அவற்றிற்கு உதவுவதற்காக அவன் தனது அருளையே திருமேனியாகக் கொண்டு வேறுபட்ட வடிவங்கள் எடுக்கின்றான். அவற்றின் மூலம் பல அருட்செயல்கள் புரிந்து உயிர்களுக்கு நலமளிக்கின்றான். அவனின் அருளும் அருட்செயல்களும் அறிவின் காரியமாக அமைந்தவை. ஞான சத்தி எனப்படும் அவனின் அறிவு சத்தி என்பதால் அவன்கொண்ட வடிவங்கள் சத்தி திருமேனிகள் எனப்படும். அவனது அருட்செயல்கள் சத்தி செயல்கள் எனப்படும்.

இறைவன் மூவகைத் திருமேனிகள் கொண்டு அருட்செயல் புரிகிறான். இவற்றில் ஒன்று அருவத்திருமேனி. இது கண்களுக்கு புலனாகாது. மற்றையது உருவத்திருமேனி. இது கண்ணுக்குப் புலனாவது மூன்றாவது அருவுருவத் திருமேனி. இது அருவத்துக்கும் உருவத்திற்கும் இடைப்பட்டது. ஒரு பொழுது கண்ணுக்குப் புலனாகியும், புலனாகாமலும் இருக்கும் உருவம் இது. ஆகவே இறைவன் கொள்ளும் வடிவங்கள் அருவம், உருவம், அருவுருவம் என மூன்று நிலைகளில் உள்ளன (இவற்றின் விரிவான விளக்கம் பின்வரும் பாடங்களில் தரப்படும்).

### இறைவன் அருட்செயல்கள் முத்தொழில் என்றும் ஐந்தொழில் என்றும் கூறப்படுகின்றன இவற்றின் பொருள் என்ன?

உயிர்களுக்கு வேண்டிய உடம்பையும், உடற் கருவிகளையும், உயிர்களின் அனுபவத்திற்கான உலகையும் இறைவன் படைத்தளிக்கிறான். இது அவனின் படைத்தல் தொழில். படைத்தவற்றை ஒரு கால அளவுக்கு நிலை பெறச் செய்கிறான். இது அவனின் காத்தல் தொழில் அவற்றின் காலம் முடிந்தபின் அழிக்கிறான். இது அவனின் அழித்தல் தொழில், படைத்தல்,காத்தல், அழித்தல் ஆகிய இம் மூன்றும் முத்தொழில் எனப்படும்.

உலக வாழ்வில் உயிர் செயல் புரிந்து, அனுபவம் பெற்று, அறிவு விளக்கம் பெறுகிறது. இதற்குத் துணைபுரிவது இறையருள். ஆனால் அது தன்னை உயிருக்குக் காட்டாமல் மறைத்துக் கொண்டிருக்கிறது. இது இறைவனின் மறைதல் தொழில், ஆன்மீக வளர்ச்சியடைந்த உயிருக்கு இறுதியில் இறைவன், தன்னைக்காட்டி அருள்புரிகின்றான். உயிர் முத்தி அடையதுணை புரிகின்றான். இது அவனின் அருளல் தொழில், முத்தொழிலுடன் மறைதல், அருளல் ஆகிய இரண்டையும் சேர்த்து ஐந்தொழில் என்று கூறுவார் காத்தலில் மறைத்தலும், அழித்தலில் அருளலும் அடங்கும். ஆகவே முத்தொழில் என்பதும் ஐந்தொழில் என்பதும் வேறுபட்டவையல்ல என்பது கருதற்பாலது. இறைவன் உயிர்களின் நலத்திற்காகவே ஐந்தொழில் புரிகின்றான்.

### சைவத்தில் எத்தனை கடவுள் உள்ளனர்?

சைவத்தில் கடவுள் ஒருவரே. அவரைச் சிவம் அல்லது சிவன் என்று சைவர்கள் அழைக்கிறார்கள். 'ஒன்றேபதி' என்று சிவஞான போதம் கூறுகின்றது. 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க' என்று திருவாசகமும் 'ஒருவனே தேவனும்' என்று திருமந்திரமும் உரைக்கின்றன.

ஒன்றாகிய சிவம் உயிர்களுக்கு அருளுவதற்காகப் பல வடிவங்கள் எடுக்கிறது. அவை வேறு வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

### அம்பிகை, விநாயகர், போன்ற தெய்வங்கள் சிவனின் வேறானவையல்லவா? அப்படியாயின் ஒன்றே பதி என்று எங்ஙனம் உரைக்கலாம்?

நாம் பார்த்து வணங்கும் வடிவங்களெல்லாம் சிவனின் வடிவங்களே. அம்பிகையின் வடிவம் சிவனின் அருளைக் குறிப்பது, விநாயகர், முருகன், வைரவர், வீரபத்திரர் ஆகிய தெய்வங்கள் அருளும் வகையால் சிவன் கொண்ட திருவடிவங்களே. ஒரு மனிதன் வீட்டில் தந்தை, கணவன் போன்ற நிலைகளிலும், வெளியில் ஆசிரியர், பொறியியலாளர் போன்ற நிலைகளிலும் காணும் வடிவங்கள் போன்றவை இவை. இவற்றை விட சிவ மூர்த்தங்களாக இருபத்தைந்து வடிவங்கள் கூறப்படுகின்றன தட்சணாமூர்த்தி, நடராசர்



போன்ற வடிவங்கள் இவற்றில் அடங்கும். சிவலிங்க வடிவமும் இவையும் சைவர்களின் வழிபாட்டுக்குரிய வடிவங்கள்.

### உயிர் என்று ஒன்று இருக்கிறதா? இது குறித்த சைவசித்தாந்தக் கருத்து என்ன?

உயிர், ஆன்மா என்பன ஒரு பொருட் சொற்கள் உயிருக்குத் தோற்றமும் முடிவும் இல்லை. அது என்றும் நிலையானது. மனிதர்கள், மிருகங்கள், பறவைகள் ஆகியவற்றிற்கு உயிர் உண்டு. உயிர்கள் பல என்பதும், ஒவ்வொரு உயிரும் தனியான ஒன்று என்பதும் சைவசித்தாந்தக் கருத்து.

### உயிர்கள் பல என்பதற்கு என்ன காரணம்?

ஒரு மனிதனைப் போல் இன்னொரு மனிதன் இருப்பதில்லை. தோற்றம், செயல், சிந்தனை ஆகியவை மனிதனுக்கு மனிதன் வேறுபடுகின்றன. மிருகங்கள், பறவைகள், நீர்வாழ்வன, ஊர்வன என்று பல உயிர்கள் உள்ளன. அவற்றிலும் ஒவ்வொரு தொகுதிக்குள்ளும் பற்பல வேறுபாடுகள் உள்ளன. இதனால் உயிர்கள் பல என்பது புலனாகின்றது. உயிர் உண்டு, அது பலவாக உள்ளது என்பது சைவத்தின் கொள்கை.

### உயிர் உண்டு என்பதை எவ்வாறு அறிவது?

நாம் 'எனது உடல்', 'எனது கை', 'எனது மனம்' என்றெல்லாம் பேசுகின்றோம். 'எனது' என்று சொல்லுவதால் நாம் வேறு, எமது கை கால் முதலிய புறக்கருவிகளும், மனம் முதலிய அகக்கருவிகளும் எம்மில் வேறானவை என்பன புலனாகிறது. இதனால் ' நான்' வேறு, எனது உடலும் உடற்கருவிகளும் வேறு என்று அறிந்து கொள்கிறோம்.

ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது இவை எதுவும் இயங்குவதில்லை. எதையும் நாம் அறிவதோ, உணர்வதோ இல்லை. மனம் முதலிய கருவிகள் செயலிழந்து விடுகின்றன. ஆயினும் உறக்கம் நீங்கிய பின், 'நான் ஆழ்ந்த உறக்கதில் இருந்தேன்' என்ற உணர்வு உண்டாகிறது. இதனால் எமது உடலுக்கும் மனம் முதலிய கருவிகளும் வேறானதொன்று உள்ளதென்பதும் 'நான்' என்று இதனையே நாம் குறிப்பிடுகிறோம் என்பதும் அறியப்படுகிறது. இதுவே உயிர் என்று கருதமுடிகிறது.

### உயிர் கடவுளால் படைக்கப்படவில்லையா?

இல்லை, உயிர் கடவுளால் படைக்கப்படவில்லை. கடவுளைப் போலவே உயிரும் அனாதியானது. அதற்குத் தோற்றமோ அழிவோ இல்லை.

### உயிர் பிறந்து இறப்பது இல்லையா?

பிறந்து இறப்பது உயிருடன் கூடிய உடம்பே, உயிர் அல்ல. உடம்பையும் அதன் உட்கருவியையும் இறைவன் படைத்து உயிருடன் சேர்க்கின்றான். இது பிறப்பு எனப்படும். அவை குறிப்பிட்ட ஒரு கால அளவு நிலைத்து நின்று பின் அழிகின்றன. இது இறப்பு எனப்படும். ஆகவே, பிறப்பு இறப்பு என்பன உயிருடன் சேர்ந்த உடம்பைப் பற்றியனவே, உயிரைப் பற்றியன அல்ல

### உயிரைப் பசு என்று குறிப்பிடுவதற்கு காரணம் என்ன?

உயிருக்குப் பல குறைகள் உள்ளன. அறியாமை, தற்செருக்கு, கோபம், போன்றவை இவைகள். இவற்றுக்கு மூலம் ஆணவம் என்ற ஒன்று இது உயிருக்கு கட்டாக அமைந்து, உயிரின் ஆற்றல்கள் வெளிவர முடியாதபடி தடை செய்கின்றது. பாசம் என்பதும் 'கட்டு' என்ற பொருள் தருவது. ஆகவே ஆணவம் ஒரு பாசப்பொருள். கன்மம், மாயை என்பனவும் ஒரு வகையில் உயிரைக் கட்டுப்படுத்துவதனால், அவையும் பாசம் எனப்படுகின்றன பாசத்தினால் கட்டுப்பட்ட ஒன்று பசு எனப்படுகிறது. உயிர் பாசத்தினால் கட்டுப்பட்டதாதலின் (பசுத்துவ முடையது என்பதால்) பசு எனப்படுகிறது.

திருச்சிற்றம்பலம்

மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை
(கலாநிதி க.கணேசலிங்கம்)

# பண்டைத் தமிழருக்கு ஒரு தொடராண்டு இல்லையா? தைத் தமிழ்ப் புத்தாண்டு வரலாறும் அதன் இடர்பாடுகளும்

**(சித்திரையே தமிழர் புத்தாண்டு)**

தமிழர் கால ஐந்திர (பஞ்சாங்க) வானியல் அறிவியல், பண்டைய காலம் தொட்டு மிக நுட்பமாக , நூதனமாக உருவாக்கப்பட்டு செயலிலிருந்தாலும் , அதனின் ஆழறிவியல் துலக்கத்தை முழுமையாக ஆராயாது, அதன் வானியல் இயற்பியல் (Astro physics) உண்மைகளை வலுவூட்டி முறையாக வெளிக்கொணராது, தமிழர் வானியல் கணிய வள்ளுவ கல்வி இன்று புறக்கணிக்கப்பட்டு கிடப்பது தமிழர்களுக்கு நிகழும் பேரிழப்பாகும்.

**சென்ற திங்கள் தொடர்ச்சியாக இந்தக் கட்டுரை அமைகிறது.**



முனைவர். இரா.சிவகுமார், (மலேசிய அறிவியல் பல்கலைக்கழகம்)

*தைத் திங்கள் நமது தமிழ் மரபு போற்றும் திருமாதமாக இருந்தாலும் வானியல் கிரக கால இயக்கத்திற்கு, இயற்கை வாழ்வாதாரம் தொடங்கும் தமிழாண்டுக் காலத்திற்கு ஏன், எவ்வாறு முதல் ஆகாது என்பதை விரித்துக் காண்போம்.*

*4) சிலர் கூறுவதுபோல் அப்படி சூரிய அயணப் பெயர்ச்சி கணிதத்தைக்கொண்டு* (Course of the Sun Northward or Southward Mathemathics) *சூரிய ஒரை மான* (Solar year prediction) *கணியத்தையும், சந்திர மான* (Lunar Prediction), *வியாழ மான* (Jupiter or Jovian year prediction), *காரி (சனி) மான* (Saturn year prediction), *கனையழல் மான* (Intense Heat prediction) *கணிதங்களைச் செய்ய முடியும் என்றால் எந்த வானியல் கணித அடிப்படையை வைத்து வானியல் வடிவியல் ஆயப்புள்ளியைத் தொடங்குகிறார்கள்?* (Please demonstrate, based on which mathematical celestial geometrical coordinate origin point is being used to calculate the solar year prediction, lunar year prediction and jovian year prediction? *என்பதை எடுத்துக்காட்ட வேண்டும். இதனைத் தமிழ் தைப்புதாண்டு விரும்பிகளில் ஒருவராவது எங்கேயாவது தெளிவுபடுத்தியுள்ளனரா? இல்லையே.*

*5) திருக்குறளின் காலத்தை நிறுவுவதில் தமிழ் அறிஞர்களுடையே பெரிதும் கருத்து வேற்றுமைகள் உள்ளன. இந்தக் கருத்து வேறுபாடுகள் பிற்கால ஆய்வின் வழி வள்ளுவர் காலத்தைக் கணிப்பதில் பெரு மாற்றத்தை ஏற்படுத்தினால் யாருக்கு அவலம் ? எ.கா:*

i. *சோமசுந்தர பாரதியார், மா. இராஜமாணிக்கனார் முதலானோர் குறளின் காலம் பொ.ஊ.மு. 300 என்று உரைக்கின்றனர்.*

ii. *வரலாற்று அறிஞர் கே.கே.பிள்ளை குறளின் காலம் பொ.ஊ.மு. முதலாம் நூற்றாண்டு என்று நிறுவுகிறார்.*

*iii. செக் நாட்டுத் தமிழ் ஆய்வாளர் கமில் சுவெலபில் கணிப்பின்படி வள்ளுவரது காலம் சங்கப் புலவர்களுக்குப் பின்னரும் பக்திப் புலவர்களுக்கு முன்னருமான பொ.ஊ. இரண்டாம் நூற்றாண்டுக்கும் பொ.ஊ. ஐந்தாம் நூற் றாண்டுக்கும் இடைப்பட்டதாகும் என்கிறார்.*

iv. *1959-ம் ஆண்டு எஸ். வையாபுரிப்பிள்ளை தனது ஆய்வின் முடிவாகத் திருக்குறள் பொ.ஊ. ஆறாம் நூற் றாண்டைச் சார்ந்தோ அதற்குப் பிற்பட்டதோ ஆகும் என்று குறிப்பிட்டார்.*

v. *1921-ம் ஆண்டு தமிழக அரசு மறைமலை அடிகள் செய்த ஆராய்ச்சியினை ஏற்று பொ.ஊ.மு. 31-ம் ஆண்டினை வள்ளுவர் பிறந்த ஆண்டாக அறிவித்தது.இதன் விளைவாக அன்று தொடங்கி தமிழகத்தில் ஆண்டுகளைக் குறிக்கத் திருவள்ளுவர் ஆண்டும் பயன்படுத்தப்படுகின்றது. தமிழக நாட்காட்டிகளில் ஜனவரி 18, 1935 அன்று முதல் வள்ளுவர் ஆண்டு சேர்க்கப்பட்டது.*

*6) 1929ஆம் ஆண்டு தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வழி சோதிட வல்லுநர் திரு.இ.மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களால் சைவ ஆகம முறைப்படி அமைத்துக் கொடுத்த முதற் சைவப் பஞ்சாங்க திருக்குறள் நாட்குறிப்பை ஏன் அக்கால தமிழறிஞர்கள் எங்குமே சீர்தூ க்காது,கைவிட்டனர்?*

*ஐந்திர (பஞ்சாங்கம்) பெயராக ஆட்டினை* (Fiducial Goat) *வைத்துக் கணித்த சித்திரைப் புத்தாண்டு எனது அல்ல, என்ற தீர்க்க முடிவுக்கு வந்து விட்ட தைப்புத்தாண்டு வேண்டி நிற்கும் அன்பர்கள், பழந்தமிழர் கட்டமைத்த ஐந்திர (பஞ்சாங்கம்) வேண்டாம் என்று தள்ளி விட்டு, பஞ்சாங்கம் கணித்த சூரிய மான* (Solar Year Prediction), *சந்திர மான* (Lunar Prediction) *கால கணிய நாள்குறிப்பில் அமர்ந்து கொண்டு ஆண்டு பிறப்பைப் புதிதாகத் தைக்கு மாற்று என்று கோருவது அறிவுடைமையாகுமா?*

*7) பதினெண்கீழ்க்கணக்கு, திருக்குறள் ஆண்டைச் சுமந்திருக்கும் திருக்குறள் உட்பட அனைத்து (18) நூல் களிலும் மற்றும் ஐம்பெருங்காப்பியங்கள் இவை எதிலும் தை என்ற சொல்லோ அல்லது தைத்திங்கள் பற்றியதொரு சிறப்போ முற்றிலும் பதிவுசெய்யப்படாமல் போனது ஏன்? எல்லா சங்கத்தமிழிலிலும் தைத் திங்கள் தை நீராட்டு விழாகவே கொண்டாடப்பட்டது.*

**தை நீராட்டு விழா:** *(தையில் நீராடிய படுவாளோ- கலி. 13)*

*தைப் பொங்கல் குறிப்பு எங்குமே காணக் கிடைக்கவில்லை. சங்கத்தமிழில் கூறப்படாத திருநாள்கள், தமிழர்களின் திருநாள்கள் இல்லையென்றால், உழவர் பொங்கல் திருநாள் தமிழர்களுடைய திருநாளன்று என்றே முடிவாகும். ஏற்கமுடியுமா?*

*(8) ஒரு குமுக அல்லது இனத்திற்கு, மறுமலர்ச்சித் தூண்டுகோலாக, பெருஞ்சிறப்புகள் அத்தனையும் தன்னகத்தே கொண்ட தமிழுக்கே மூலமாகிய ஒரு நூல் தொல்காப்பியம். ஏன் தொல்காப்பிய ஆண்டிலிருந்து தமிழ் ஆண்டு தொடராண்டாகக் கணக்கிடப்பட வில்லை? திருக்குறளுக்கு முந்தைய பல நூறு ஆண்டுகளைக் கொண்ட, தமிழர் பருவ காலத்தை முதன் முதலில் ஆறு காலத்தில் வகுத்துப் பெரும்பொழுது சிறுபொழுது பகுத்துக்காட்டிய தொல்காப்பியம் ஏன் முதன்மைபடுத்தப்பட்டுத் தமிழுக்குத், தமிழ் மரபுக்குத் தொடராண்டாக ஆக்கப்படவில்லை?*

*தமிழர் காலக் கணியம் முற்றிலும் ஓர் இயற்கை அறிவியல்* ( Science), *அது வரலாறு* (History) *அல்ல.*

*முதலில் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கை நன்றாகத் தமிழ் அன்பு உள்ளங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழர் வாழ்க்கை இயற்கை இயலிய வாழ்க்கை. தமிழ் இயற்கை மொழி. ஆகவே தமிழர்களின் அறிவியல் இயற்கைக்கு முரணாக எழுவது கிடையாது.*

**செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து**
**இயற்கை அறிந்து செயல்.** *(குறள். 637)*

Purport: Though you are acquainted with artificiality (unnaturalness) but the truest act is to understand the world of naturalness and to follow the natural world in the act.

*செயற்கைத் தெரிவியல் அல்லது புரிதல் வாழ்வியலை ஆட்படுத்தியிருந்தாலும், இயற்கை நியதியை முதன்மைப் படுத்திய செயலாக, நமது அறிவும் செயல்களும் இலக்கு கொண்டிருக்க வேண்டும் என்பது வள்ளுவப் பெருந்தகையின் நிலைப்பாடு. எதற்காக இயற்கையைச் சார்ந்து நாம் நிற்றல் வேண்டும் ? என்று வினவ முற்படுவோமானால், நம்பிக்கையின் ஆதாரம் இயற்கையைச் சார்ந்து நின்றால் ஒழிய மற்றவை அறிவியலுக்கு வகை செய்யும் உறுதிப்பாடு செய்யாது என்ற பதிலையே பெறுவோம். இயற்கையில் கோடல்* (Biasness) *இல்லை. ஆகவே இயற்கையே உண்மையின் வெளிப்பாடு. இயற்கையைச் சார்ந்து சான்றுகள் இருத்தல் வேண்டும் என்பது இதன் ஆழ் பொருள் விளக்கமாகும்.*

*சங்கப்புலவர் நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையில் இயற்கையை அதன் ஆற்றுப்படுத்தும் நெறிப்படுத்தும்) ஆற்றலை இயவுள் என்பார்.*

**“பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள்”** - *திருமுரு.*

*இயவுள் எனும் இயவு (செலுத்தும்) ஆற்றுபடுத்தும் (நெறிபடுத்தும்) ஆற்றல் உடைய உள் பொருளாகும். இயவுள் எனும் இவ்வியற்கை சத்தியமானது* (Truth Discening), *கோடல்* (Biasness) *இல்லாதது என்பது இதன் பொருளாகும். ஆகவே இயற்கையை ஆதாரமாகக் கொண்டு வாழ்வின் இலக்குகள் அமைதல் வேண்டும். இயற்கை நியதிக்கு எதிராக எதுவாக இருந்தாலும், அது உயிர்களே உயிர்களுக்குச் செய்யும் பெரும் நாசம் அல்லது அழிவு. அது மொழிப் பற்றோ இனப் பற்றோ அரசியல் பற்றோ எதுவாக இருப்பினும் இறையியல் படைப்பிற்கு, உயிர் வாழும் நோக்கத்திற்குப் பயன் தராது பாழ்படுத்தும்.*

**எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.** *(குறள். 355)*

Purport: Knowledge is the TRUTH of substance to find, in every case of every kind.

*தமிழர் காலக் கணியம் ஓர் அறிவியலா* (Science) *அல்லது வரலாறா* (History) *? என்ற தெளிவின்மை முதலில் தற்கால சில தமிழ் அறிஞர்களிடையே ஏற்பட்டது முதல் இடர்பாடாகும். தமிழர் காலக் கணியம் முற்றிலும் ஓர் அறிவியல்* (Science), *அது ஓர் வரலாறு* (History) *அல்ல என்பது திண்ணம். எப்படி?*

*ஒரு மொழி இலக்கண நூலாக மட்டும் அல்லாது, இயல் வாழ்வியல் இலக்கண நூலாக ஆக்கம்பெற்ற ஒரே பண்டைய இலக்கண நூல் தமிழர்களின் தொல்காப்பி யமே. உலகில் தொல்காப்பியம் மட்டுமே இயல் வாழ்வியல் ஒழுங்கு நிறுத்தும் உயிர் ஆகு புலத்தை* (Psyche Ascending Field) *உருவாக்கும் மீ-அண்ட* (Macrocosm) *வானியலை* (Cosmological) *புறத்திணையாகவும், நுண்-அண்ட* (Microcosm) *நூதன குவையச் (குவாண்டம்-* Quantum*) இயங்கு மண்டில புலங்களை அகத்திணையாகவும் பகுத்துப் பிணைத்துக் காட்டியுள்ளது.*

*இந்தப் புறத்திணை வாழ்வியலை அண்டச் சிந்தனை பண்பாடாகவும்* (Cosmic Thinking Culture), *அகத்திணையை மிக நூதன குவையச் (குவாண்டம்) சிந்தனை பண்பாடாக* (Quantum Thinking Culture) *அகப்படுத்தி அறிவியலாக வளர்த்த பாங்கு முற்றிலும் தற்கால அறிவியல் உலகுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாகும்* (Tamil Science as a role model for Modern Ccience) *(சிவகுமார், 2023).*

## தொல்காப்பியர் வளர்த்த மயங்கா மரபின் பெரு விழுமியம்

**மறுவில் செய்தி மூவகைக் காலமும்**
**நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்**
*- (தொல்.பொருள்.புறத்.74 )*

*என்பதாகும்.*

*1. முக்கால நெறியின் அறிவை வளர்க்கும் அறிவர்களின் திறனைத் தொல்காப்பிய பண்டைத் தமிழர்கள் எவ்வாறு மறுவில் செய்தியாக* (Information Certainty) *வளர்த்தார்கள் என்பதை சில தற்கால தமிழ் அறிஞர்கள் அறியாது காலத்தை ஒரு வரலாறாக* (history) *மாற்ற முயல்வது தமிழர் மயங்கா மரபின் பெரு விழுமியத்திற்கு இழுக்கன்றோ? முக்காலம் அளக்கும், கணிக்கும் தமிழ் ஐந்திர (பஞ்சாங்க) புறக்கால வானியல், ஐம்பூத அறிவியலை, அதன் இயற்பியலை* (Physics) *ஒரு தனிமனித அல்லது குமுகாயத்திற்குள் முடக்குவது தமிழ் அறிவியலாகுமா? ஒரு தனிப்பட்ட அரசரையோ , மனிதரைரையோ, ஞானியரையோ வைத்து உருவாக்கும் தொடராண்டு, செயற்கையாகவே இருக்குமே யல்லாது எந்த இயற்கை மாற்றங்களையும் அறியத் துணை செய்ய இயலுமா, முக்கால நெறியின் அறிவை தந்துவிடுமா ? மறுவில் செய்தியாகிவிடுமா* (Can it be information certainty)*? மற்ற இனத்தவர் பின்பற்றும் தனிமனித வரலாற்று தொரடாண்டுக் காலத்தை நாமும் பின்பற்ற வேண்டும் என்று நாமும் அவர்களின் வழி செல்வது, செல்ல முனைவது அறிவியலாகிவிடுமா?*

*2. தமிழருக்கென்று ஒரு தொடராண்டு இல்லையா? தொடராண்டு உருவாக்குவதில் இடையூறுகள் எங்கேயாவது உருவாகி உள்ளனவா? நமது பண்டைய தமிழ் பேரறிஞர்கள் வானியல் காலம் அறியாதவர்களா? அவர்கள் தொடராண்டு தெரியாது தமிழ் கால ஐந்திர பஞ்சாங்கம் வகுத்தனரா? வானியல் கால அறிவியல் இல்லாது நெடுங்கால கடல் பயணம் செய்தனரா? தொடராண்டு தெரியாது தமிழ் வள்ளுவ, கணிய பேராசான்கள் மாண்பு மிக்க சங்க கால பண்பாட்டை உருவாக்கினார்களா? எத்தகைய புரட்டு. தற்கால தமிழறிஞர்கள் தமிழ் கால ஐந்திர பஞ்சாங்க வானியல் அறிவியலை முறையாக உள்வாங்காது அதன் கணித வானியல் கட்டமைப்பைப் புரிந்துகொள்ளாது செயல்படுவதுவே இப்புரட்டிற்கு முதல் காரணமாகும். தமிழர்கள் இயற்கை வானியல் ஊழி தூர காலத்தையே தொடராண்டாக கணித்து வந்துள்ளனர் என்பதை தெளிவாக சங்கத் தமிழில் பதிவு செய்துள்ளனர்.* **(08ஆம் பக்கம் பார்க்க)**

## பண்டைத் தமிழருக்கு ஒரு தொடராண்டு இல்லையா?...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியை அளவிடும் திறன்கள் தமிழர்களுக்கு எக்காலத்திலும், என்றுமே இருந்துள்ளன. ஆனால் ஏன் தற்கால தமிழறிஞர்கள் எங்குமே ஊழிக் கால அறிவியலைக் கணக்கிடாது தவறினர், அதனைக் கருத்தூன்றி ஆராயாது போயினர் ?

**ஊழியும் யாண்டு எண்ணி யாத்தன் யாமமும்**
**நாழிகையானே நடந்தன** (நான்மணிக்கடிகை, 71)

3. தமிழர்கள் தொல்தமிழ் காலந் தொட்டு எவ்வாறு காலத்தைக் கணித்தனர் என்ற அறிவியல் அறிவை சங்கத்தமிழ் பெருங்குன்றூர் கிழார், பதிற்றுப்பத்தில் (பதி.90: 51-54) செம்மைபட விதந்தெடுத்துக் கூறுவார்.

**நின் நாள் திங்கள் அனைய ஆக திங்கள், யாண்டு ஓரனைய**
**ஆக் யாண்டே, ஊழி அனைய ஆக் ஊழி.**


என்பார்.

அ) சந்திரன் (திங்கள்) அதன் நாள்மீன் ஓரையில் ஏனைய மாதங்கள் ( திங்கள்) கணிக்கப்படுகின்றன.

ஆ) சூரியன் ஆடு ஆயப்புள்ளியில் (Fiducial Goat Origin Point) ஏனைய ஆண்டுகள் கணிக்கப்படுகின்றன.

அதாவது வான்நடுவரையையும் (Celestial Equator), நாள்மீன் (உடு) தலைப்படும் (Anchor Stellar Axis) மைவரை (Meridian) நெட்டணைவினையும் குறுக்கு வெட்டாக வெட்டும் முப்பரிமான ஆய அச்சி வடிவியல் (3 -Dimensional Geometrical Coordinate System) யாண்டு - பெயரா ஆடு ஆயப்புள்ளியில் (Fiducial Ggoat Origin Point) சூரியன் அனைய ஆண்டுகள் கணிக்கப்படுகின்றன.

பெயராத, நிலையான உடு (நாள்மீன்) ஆய அச்சி (Fiducial




or Anchor Stellar Axis) மைவரை (Meridian) நெட்டணைவு வைத்து ஞாயிறு ஆய அச்சு (Ecliptic Coordinate Axis), வான்கோள ஆய அச்சு (Celestial Coordinate Axis) குறுக்கு வெட்டு தமிழர் வானியல் காலக் கணித வடிவமைப்பாகும் ( Tamilar Astro Time Mathematical Model).

இ) ஊழி என்பதை இயற்கை நிலைப்பெயராமை அல்லது தடம்பெயராமை என்றும், இயற்கை பெருந்தோன்றல் களாகவும் தமிழர்கள் கண்டனர். ஊழி என்றால் முந்தைய இயற்கை விதிகள் அழிந்து புதிய இயற்கை பிறத்தல் என்றும் பொருள் கொள்ளலாம். இயற்கை தூரகால அறிவியலை ஊழி என்று தமிழர்கள் அழைத்தார்கள். எ.கா:

**நாழிகை ஊழியில் நீண்டு உலாவும்**
-பெரிய திரு-9: 5:3

திங்கள், ஞாயிறு அல்லது மற்றைய கோள்கள் இணைந்து நாள்மீன்கள் அல்லது உடு மற்றை எல்லா வானியல் தனிமங்களும் ஒன்றிணைந்து கால மண்டிலமாகப் பெரும்கூட்டமாக இயங்குவதை அல்லது சுழற்மண்டில ஓர் அகன்ற தூர காலமாக உருவாகுவதை ஊழி என்று தமிழர்கள் அழைத்தனர்.

சூரிய, சந்திர, பெரும் கோள்களாகிய வியாழன், காரி (சனி), உடுக்களின் 360 பாகை சுற்றை ஒரு நேர் கோட்டில் நற்றோன்றல் (பிரபவம்) சுழியத்தில் (0) நிறுத்தி உடுமான (நாள்மீன்) (Sidereal Year Prediction) துரகால ஊழி, சூரிய மான (Solar Year Prediction), சந்திர மான (Lunar Prediction), வியாழமான (Jupiter or Jovian Year Prediction), காரி (சனி) மான (Saturn Year Prediction) கணியங்கள் ஒருமித்து அனைந்து ஒன்றிய ஒரு கணியமாக உருவாகுவது ஊழியாகும்.

பண்டையத் தமிழர்கள் ஐந்திர பஞ்சாங்கத்தில் கணித்த உடுமான (நாள்மீன்) (Sidereal Year Prediction) நிரயன பெயரா ஆடு ஆயப்புள்ளியே (Fiducial Goat Origin Point) மேழ ஊழி தொடராண்டு காலமாகும். மேழ தொடராண்டு ஊழி என்ற ஒன்று தமிழர்களுக்கு உண்டு. தமிழ் கால ஐந்திர பஞ்சங்க கணித்தில் மேழ (சித்திரை) மாதத்தை முதல் ஆண்டாகக் கொண்ட காலவூழி கி.மு 2403 யாகக் கணிக்கப்பட்டுள்ளதை மெட்ராஸ் பிரசிடென்சி சொற்களஞ்சியம் (Maclean, 1982) மேற்கோள் காட்டுகின்றது.

இக்கணிதத்தை நிரயன சாயன வேற்றுமையில் கணக்கிட்டுவிடலாம். தற்போது கிடைக்கும் சிதேல்லேரியம் வானியல் மென்பொருள் (Stellarium Astronomy Software) தொழிநுட்ப அறிவியல் வழி தமிழர்கள் வகுத்தக் காலவூழியை துல்லியமாக உறுதிசெய்து, தமிழர்களின் கால ஐந்திர பஞ்சங்க கணித்தின் மாண்பினை உணர்ந்துக்கொள்ளலாம். சூரிய ஓரை மான (Solar Stellar Year Prediction) சாயன இளக்க ஆடு ஆயப்புள்ளி (Flexible Goat Origin Point) கணியத்தில் நிரயன பெயரா ஆடு ஆயப்புள்ளி (Fiducial Goat Origin Point) அறிவில்லாது ஊழிக் காலத்தைக் கணிக்க இயலாது. நிரயன பெயரா ஆடு ஆயப்புள்ளி (Fiducial Goat Origin Point) ஊழி காலத்தை வானியல் அளவை மட்டக்குறியாக (Benchmark) வைத்து, ஆண்டிற்கு ஆண்டு பன்னிரு ஓரை வட்டணையைச் சாயன இளக்க ஆடு ஆயப்புள்ளியோடு (Flexible Goat Origin Point) ஒப்பிட்டுச் சரி செய்யும் நுட்பமான வானியல் தொழில்நுட்பத்தைப் பண்டைய காலத்திலேயே தமிழர்கள் பெற்றிருந்தனர்.

விரிக்க நீண்டு விரியும் என்பதால், ஆழ் தமிழ் வானியல் அறிவியல் விரிவுக்கு தமிழர் கால ஏரண மெய்யறிவு தொகுதி 1: புறக்காலத்தியல் (Tamilar Hermeneutic Logical Wisdom of TimeVolume 1: Physical Time) (சிவகுமார், 2023), நூலின் ஆறு இயல்களைக் காணவும்.

i. தமிழர் சித்திரைப் புத்தாண்டுப் பிறப்பு (The Birth of Tamilar Chitthirai New Year)

ii. ஏன் தை மாதம் தமிழர்களின் புத்தாண்டுக் கணியக் கட்டமைப்பு அல்ல (Why the month of Thai is not the Tamil New Year Prediction Mode)

iii. வானியல் வடிவியல் கணித வழியாகத் தமிழர் ஆண்டுப் பிறப்பைத் தொல் தமிழர் சித்திரையிலிருந்து புதிய தைப்புத்தாண்டுக்கு ஏன் மாற்ற முடியாது (Why The Birth of Tamil New Year Cannot be Changed from Ancient Tamil Chittirai to New Thai Birth Year through Astro Geometrical Mathematics)

iv. ஏன் தமிழர்கள் பெயரா ஆடு ஆயப்புள்ளியை வான் கணித அறிவியலாக ஏற்றனர் (Why Tamilar Accepted Fiducial Goat Origin Point as Aerospace Mathematical Science)

v. தமிழர் 60 ஆண்டு (அறுபான்மான) கணியமுறை (Tamilar Sexagesimal base - 60 Years Prediction)

vi. ஏன் தமிழர் புத்தாண்டு வானியல் இளக்கவிழுவ ஆடு (கூ21 மார்ச்) பங்குனி அல்லாது பெயரா மேழவிழுவ ஆடாகிய (கூ14 ஏப்ரல்) சித்திரையில் வைக்கப்பட்டது (Why Tamil New Year Astronomy was Placed in Chittirai's Fiducial Vernal Goat (~14 April) and not in Panguni's Flexible Vernal Equinox Goat (~21 March)

குழப்பத்தை விட்டு இதுவரை தமிழ் மேழப் புத்தாண்டு எப்படி தமிழ் ஐந்திர (பஞ்சாங்க) புறக்கால மரபாக ஏற்கப்பட்டு கொண்டாடப்படுகின்றதோ அதனை அவ்வாறே ஏற்பது தமிழ் மரபு திரியாது, பிரிது பிரிது ஆகாது காக்கப்படும் முயற்சியாகும். அதுவே தமிழர் தற்காக்கும் மயங்கா இயலிய மரபும், தமிழர் வானியல் அறிவியலும் ஆகும். ஆதலால் தைத் திங்கள், தமிழ் புத்தாண்டு பிறக்கும் காலம் அல்ல என்பது உறுதி. திருவள்ளுவ தொடராண்டு என்பது கால அறிவைச் சீர்மை செய்ய, பண்பாட்டின் வரலாற்று மேன்மையைப் பறைசாற்ற, பழம்பெரும் மெய்யுணர்தலை நினைவில் பதிவிக்க எழுந்த ஒன்றாக இருப்பதால் பிணக்குகள் விட்டு அதனைத் தமிழர்களின் ஆண்டு காலக்குறிப்பில் ஊழிக்காலத்திற்குத் துணைச்செய்யும் சிறப்பு தொடராண்டாக ஏற்போம். தமிழர் மயங்கா மரபின் காலக் கணியம் முற்றிலும் ஓர் இயற்கை அறிவியல் (Natural Science), அது ஒரு தனிமனித வரலாறு (Personal History) அல்ல என்பதை நினைவில் கொள்வோம்.

**'உண்மையொடு ஊ ஊழியசே'** சுமேரிய தமிழ் கி.மு 2094 - 2047 சூல்கியின் பாசுரம்

'Uṇmaiyodu ū ūliyasē (un-mey-da u-ul-li-a se )' Sumerian Tamil B.C 2094 –2047 Sulgi's Hymn B

**நம்முள் உண்மை ஊழ்ந்து (முதிர்ந்து) இசைய(அசைய) என்றுமே அதனோடு ஊர்ந்து செல்வோம்**

Let our psyche always resonate and crawl together with TRUTH as destiny which arising from our inner self.

**மேற்கோள்கள் :**

1) உவங்கள் இதழில் ஜசனம் 02 ஆள் 01ஸ வெளியான 'திருவள்ளுவர் ஆண்டு - ஒரு மறைக்கப்பட்ட வரலாறு!'

2) திருவள்ளுவர் திருநாள் மலர், 1955, கொழும்புத் தமிழ்மறைக்கழகம்

3) சாமிநாதையர், 1966, திருவள்ளுவர் திருநாள் மலர், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.

4) கணேசன், நா (5 மே 2012). "திருவள்ளுவர் திருநாள் அளித்த நாவலர் சோமசுந்தர பாரதியார்". குமரிநாடு.நெற். இலிருந்து 2 சனவரி 2018 அன்று மீள்விக்கப்பட்டது.

5) தியாகராஜன், சாமி (15 மே 2014). "வைகாசி அனுடம் வள்ளுவர் திருநாள் தமிழினத்தை ஒன்றுபடுத்தும் நாள்". Vedic Science Research Centre.இலிருந்து 2 சனவரி 2018 அன்று மீள்விக்கப்பட்டதுபார்த்த நாள்

6) Thiagarajan, Sami. and Gauthaman> Bala., (28 December 2014), "Thiruvalluvar Birth Anniversary Celebrations: Heralding a glorious future" Retrieved on 3rd January 2018.

7) 14,15ஆம் ஆண்டறிக்கை (1956-57), மற்றும் 16,17ஆம் ஆண்டறிக்கை, (1958-59), கொழும்புத் தமிழ்ச்சங்கம்.

8) விசுவநாதம், கி.ஆ.பெ, (1984). "எனது நண்பர்கள்", பப.8-51

9) விசுவநாதம், கி.ஆ.பெ, (1953) "வள்ளுவரும் குறளும்", ப.13

10) ஆச்சாரி, (2012). "திருவள்ளுவர் காலம் - இளங்குமரனார் கருத்து", சிறகுகள் வலைத்தளம்.

11) நவநீதகிருடிணன் (1964), திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வரலாறு (1020-1921)

12) மறை. தி.தாயுமானவன் (2018), மறைமலையடிகளார் அடிச்சுவட்டில், மறைமலையடிகள் பதிப்பகம், சென்னை.

13) மறை திருநாவுக்கரசு (1959), மறைமலையடிகள் வரலாறு திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம்.

14) Maclean, C. D. (1982) 'Glossary of the Madras Presidency

15)சிவகுமார் (2023), தமிழர் கால ஏரண மெய்யறிவு தொகுதி 1: புறக்காலத்தியல் ( Tamilar Hermeneutic Logical Wisdom of TimeVolume 1: Physical Time), Siva Publication, A-8, Cheran Nagar, Coimbatore.

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

# திருத்தொண்டு நெறிவாழ உதித்த ஞானத்தவ முனிவர் திருநாவுக்கரசர்




**"திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்"**

### மருணீக்கியார் சமணம் பற்றி தருமசேனர் ஆனமை

திருமுனைப்பாடி நாட்டிலே, திருவாமூரிலே பெருந் தலைவரான புகழனாருக்கும் மாதினியாருக்கும் தவப்புதல்வியாக திலகவதியார் பிறந்தார். திலகவதியார் பிறந்து முறையாக சில ஆண்டுகள் கழிந்த பின், அளவில்லாது கலைத்துறைத் தழைக்கவும், அருந்தவத்தோர் நெறிவாழவும், உலகின் இருள் நீக்கி ஒளி மலர்விக்கும் கதிரவன் போல 'மருணீக்கியார்' வந்து தோன்றினார். மருணீக்கியார் சிறுவயது தொடக்கம் பல கலைகள் கற்றுத் தேர்ந்து களங்கம் நீங்கப்பெற்ற இளம்பிறைபோல் விளங்கினார்.

திலகவாதியாரும் பன்னிரண்டு வயதாகிய பொழுது, புகழனார் மரபிற்கு ஒத்த மரபினையுடையவரும், சிவபத்தியிலே சிறந்தவரும், இராசாவிடத்தில் சேனாதிபதியாய் உள்ளவருமாகிய கலிப்பகையார் என்பவர், அப்புகழனார் இடத்திலே திலகவதியாருக்கும் தமக்கும் மணம் பேசுவித்தார். இதற்கு புகழனாரும் இசைந்திருந்தார். திருமண ஏற்பாடுகள் ஆரம்பமாக இருந்த நிலையில், கலிப்பகையார் எதிரிப் படையுடன் போரிற்கு சென்றிருந்தார். அச்சமயம் இங்கோ புகழனாரும் மாதினியாரும் நோய்வாய்ப்பட்டு இறந்தனர்.

தாய் தந்தையரின் இறுதிக் கிரியைகளை செய்து முடித்து கவலை சூழ்ந்து இருந்த பிள்ளைகளுக்கு மறுபக்கம் போரில் கலிப்பகையார் இறந்த செய்தி காத்திருந்தது. இதை அறிந்த திலகவதியாரும் தன்னுயிரை துறக்கத் துணிந்தபோது மருணீக்கியாரே தடுத்து நிறுத்தினார். திலகவதியாரும் மருணீக்கியாருக்காக மறுதிருமணமும் செய்யாமல் தவம் செய்து வாழ்ந்து வந்தார்.

மருணீக்கியார் யாக்கை நிலையாமையையும் செல்வ நிலையாமையையும் நினைந்து தொண்டு செய்ய விரும்பி, அன்புடனே திரவியங்களைச் செலவழித்து அறச்சாலை களையும் தண்ணீர்ப் பந்தல்களையும் அமைத்தார். சோலைகளை வைப்பித்தார் குளங்களைத் தோண்டுவித்தார் அனைவருக்கும் உணவளித்தார் புலவர்களுக்குக் பொன் உதவிகளை வழங்கினார். பிறவித் தத்துவத்தை உணர்ந்து இல்வாழ்க்கையை துறந்து தொண்டாற்றித் திரிந்தார். அவரிடத்தே சமயம் பற்றிய தெளிவின்மையால், சமணநெறியே முத்திக்கான வழி பாடலிபுத்திரம் என்னும் நகரத்திற் சென்று, சமணர்களுடைய பள்ளியையடைந்து, என்று சமணசமய நூல்களெல்லாவற்றையும் கற்று தேர்ந்து சமண வித்தகரானார். அதுகண்ட சமணர்கள் அவருக்குத் "தருமசேனர்" என்று பெயரிட்டு அவரைத் தங்கள் மத ஆசிரியராகக் கொண்டு வழிபட்டார்கள். அவர் தமது கல்வி முனைப்பினாலே பௌத்தர்களை வாதிலே வென்று புகழ் பெற்று, அனைவருக்கும் மேம்பட்டவராய் விளங்கினார். அது ฯ நிற்க.

### தருமசேனரை சூலைநோய் சூழ்ந்து கொண்டமை

திருவாமூரிலே இருந்த திலகவதியார் சிவபெருமானிடத் திலே பத்தி கொண்டு சிவபுண்ணியங்கள் செய்ய விரும்பி, கெடிலநதிக்கு வடகரையில் இருக்கின்ற திருவதிகை வீரட்டானம் என்னும் திருப்பதியிற்கு சென்று பரமசிவனை வணங்கி, சிவ சின்னங்களைத் அணிந்து, தினந்தோறும் கதிரவனின் உதிப்பதற்கு முன்னே திருக்கோயிலின் உள்ளும் புறமும் திருவலகிடுதல், கோமயத்தினாலே மெழுகுதல், பூக்கள் பறித்துக் கொண்டு வந்து திருமாலை தொடுத்துச் சுவாமிக்கு சாத்தக்கொடுத்தல் முதலாகிய சிவத்தொண்டுகளை செய்துவந்தார். செய்துவரும் நாளிலே மருணீக்கியார் சமணத்தை சார்ந்து உள்ளதை கேட்டறிந்து, வீரட்டானத்து இறைவனிடம் **"இறைவனே! என்னை ஆண்டருளுவீராகில், எனக்குப் பின் தோன்றியவனைச் சேர்கின்ற தீவினையையுடைய சமண சமயமான படுகுழியினின்றும் எடுத்தருளி அடிமை கொள்ள வேண்டும்" என்று வேண்டுகின்றார். இறைவனும் திலகவதியாரின் வேண்டுகோளுக்கு இணங்கி, அவரின் கனவில் தோன்றி "திலகவதியாரே! உனக்கு இளையவன் முற்பிற விப்பயனால் சமணத்தை சார்ந்துள்ளான். அவனை சூலை நோயால் வருத்தி ஆட்கொள்வோம்"** என்று சொல்லி மறைந்தருளினார்.

பரமசிவன் திருவாய் மலர்ந்தருளியபடியே, அவருடைய திருவருளினாலே, தருமசேனருடைய வயிற்றிலே கொடிய சூலைநோய் உண்டாகிக் குடலைக் குடைதலுற்றது. அதனால் அவர் வருந்தி நடுக்கமுற்றுச் சமண் பாழியறையில் விழுந்தார். தமக்குக் கைவந்த சமணசமய மந்திரத்தால் தடுக்கவும், அச்சூலை நோய் தடைப்படாமல் மேற்கொண்டது. மேற்கொள்ளவே, அரவ விடம் தலைக்கொண்டாற் போல அசைவின்றி படுக்கையானார். அது கண்ட சமணர் பலர் வந்து கூடி, "இந்தச் சூலைநோய் போலக் கொடிய நோய் முன்னொரு போதும் கண்டறியோம் இதற்கு யாது செய்வோம்." என்று துக்கமுற்று, பின் கமண்டலத்தில் இருக்குன்ற நீரை மந்திரித்து குடிக்க வைத்தனர். அதனாலே தணியாமையால் மயிற்பீலிகொண்டு உடல் முழுவதும் தடவினார்கள். அவர்களின் சூலை கூடியதே தவிர குறைந்ததாக தெரியவில்லை நோயை நீக்கும் வல்லமையற்ற சமணர்கள் அவரைக் கைவிட்டுப் போயினார்கள்.

சூலை நோயால் துடிதுடித்துக் கொண்டிருந்த தருமசேனர் தம்முடைய சகோதரியாராகிய திலகவதியாரை நினைந்து, அவரே தமக்கு உதவிசெய்ய வல்லார் எனத் துணிந்து, தமக்கையாருக்கு செய்தி அனுப்பினார். செய்தி அறிந்த திலகவதியார் "பதிதராகிய சமணர்களுடைய பள்ளிக்கு நான் வரேன்" என்று பதில் அனுப்பினார். திலகவதியாரின் பதில் கேட்டு செய்வதறியாது திகைத்து கொண்டிருந்த மருணீக்கியார், அப்பொழுது சிவபெருமானுடைய திருவருள் கூடுதலால், "பொருந்தாத இப்புன்மைச் சமயத்தில் ஒழியாத இத்துன்பம், ஒழியுமாறு செந்நெறி சார்ந்துள்ள திலகவதியாருடைய திருவடிகளை அடைவோம்" என்று கருதினார்.

அக்கருத்துப் பிடித்தெழுப்ப எழுந்து, இயலாமல் நடந்து, இரவோடு இரவாக சமணர்களுடைய இடத்தை கடந்து திருவதிகையிற்கு சென்று, திலகவதியாருடைய திருமடத்தை அடைந்து, அவருடைய திருவடிகளை பற்றி, "நமது குலத்தார் செய்த தவப்பயனெல்லாம் திரண்டு ஒரு வடிவெடுத்தாற்







போலும் அம்மே! அடியேன் கொடிய சூலை நோயை தாங்க முடியாமையால், உம்மையே கதியென்று அடைந்தேன். இனித்தமியேன் உய்ந்து கரையேறும் வழியை அருளிச்செய்யும்" என்று வேண்டினார். தம் அடிகளில் விழுந்து வருந்தும் தம்பியாரைப் பார்த்துத், தம்மை அடிமையாக உடைய சிவபெருமானின் திருவருளை எண்ணித் தொழுது, **"நல்ல குறிக்கோள் இல்லாத பிற சமயக் குழியில் விழுந்து பெருகிய கொடிய துன்பத்தில் வருந்தினீர்! இனி எழுந்திருப்பீராக!"** எனக் கூறி, **"இது தொகுதியான சடையையுடைய சிவபெருமானின் திருவருளாகும், தம் திருவடிச் சார்பை அடைந்தவரின் பற்றுக்களை அறுப்பவரான அப் பெருமானைப் பணிந்து பணி செய்வீராக!"** என்று பணித்தார்.

மருணீக்கியாரும் தமக்கையார் சொல் கேட்டு வணங்கி நிற்க, திலகவதியார் திருக்கயிலை மலையினுடைய இறைவரின் ஐந்தெழுத்தை ஓதித் திருநீற்றை வழங்கினார். சிவபெருமானின் திருநீற்றைத் திலகவதியார் அளிக்க, **"எனக்குப் பெருவாழ்வு வந்தது"** என எண்ணிப் பெருந்தகையாரான மருணீக்கியார் பணிந்து ஏற்றுக் கொண்டார். அதைத் தம் திருமேனி முழுதும் பொருந்த நிறைய அணிந்து கொண்டு திலகவதியாருடன் திரு வீரட்டானம் சென்றார்.

அலைகளையுடைய **"கெடிலம்"** என்ற ஆற்றின் கரையில் உள்ள வீரட்டானத்தில் இருந்த, சிவந்த பொன்மலையை வில்லாகக் கொண்ட சிவபெருமானின் பெருங்கோயிலை அடைந்து, தொழுது வலமாக வந்து வணங்கி, நிலத்தில் விழுந்து வணக்கம் செய்து, தம் பெருமானின் திருவருளால் அவர் புகழைக் கூறும் தமிழ் மாலையைச் சாத்தும் உணர்வு வர உள் உணர்ந்து உரைப்பவராகி, திருநீற்றினால் நிறைந்த மேனியுடன், மிகுந்த அன்பு பொருந்திய மனத்தில் விருப்பம் மிக, பகைவரின் முப்புரங்களை எரித்த வேதியரான வீரட்டானத்து இறைவரை, மயக்கத்தையும் சூலையையும், மாயையும் அறுக்கும் பொருட்டு,

**"கூற்றாயினவாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நான்அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில வீரட்டானத்துறை அம்மானே"**

என்ற பெருமையுடைய குற்றம் இல்லாத திருப்பதிகத்தைப் போற்றுவதால், உலகத்தில் ஏழு பிறப்புக்களிலும் வரும் துன்பமும் நீங்குமாறு திருமுன்பு நின்று பாடினார்.

நிலைபெறும் அப்பதிகத்தை அவர் அருளிய பின்பு, அவரது வயிற்றில் தங்கி வருத்திய கொடிய சூலை நோயும் அக்கணமே நீங்கிடவும், சிறப்பென்னும் செம்பொருளான சிவபெருமானின் திருநிறைந்த அருளைப் பெறுதற்கான சிறப்புடைய நாயனார், பொருந்தி நின்ற ஞான மயக்கத்தால் இறைவரின் அருள் ஆகிய கடலுள் மூழ்கி நின்றார்.

திருச்சிற்றம்பலம்

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு அங்கயற்கண்ணி (மீனாட்சி) உடனுறை சொக்கநாதர் (சுந்தரேசுவரர்) திருக்கோயில் -திரு ஆலவாய் (கடம்பவனம்)

## (தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 192 ஆவது திருக்கோயில் - திரு ஆலவாய்)



**"ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே"**

**(சென்ற திங்கள் தொடர்ச்சி)**

### திருத்தலச் சிறப்பு

உலகப்புகழ் பெற்ற சிவாலயம். பாண்டிய மன்னனின் அங்கயற்கண்ணியாம் அன்னை மீனாட்சி அம்பிகை பிறந்து நல்லாட்சி செய்யும் பதி. சிவபெருமான் 64 திருவிளையாடல்கள் நிகழ்த்திய தலம். கால் மாறி ஆடிய தலமும் இதுவே.

சிவனே எல்லாம் வல்ல சித்தராக எழுந்தருளியிருக்கும் அதி அற்புதத் தலம். **"தென்னாடுடைய சிவனே போற்றி"** என சிவபத்தர்களால் மனமுருக கூறும் மந்திரம் அமைய காரணமான சிவத்தலம். இந்திரன் வருணன் ஆகியோர் வழிபட்டுப் பேறு பெற்ற தலம். இது சிவத்தலம் என்றாலும் கூட 64 சத்தி பீடங்களுள் மீனாட்சி பீடம் முதல் பீடத்தைப் பெற்றுள்ளதால், எல்லா பூசைகளும் அன்னை மீனாட்சிக்கு முடிந்த பிறகே சிவபெருமானுக்கு நடைபெறுகின்றன. ஈசனே, தருமி என்ற புலவருக்காக இறையனாராக வந்து தமிழை ஆராய்ந்த இடம். **"நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே"** என்று வாதிட்ட தலம். நக்கீரர் வாழ்ந்த இடம். முருகன் திருவருளால் ஊமைத் தன்மை நீங்கிய குமரகுருபரர் மீனாட்சி பிள்ளை தமிழ் அரங்கேற்றியதும், திருவாதவூராருக்கு மாணிக்கவாசகர் என்ற பெயரை கொடுத்ததும், இத்தலத்தில் தான். பாணபத்திரருக்கு பாசுரம் எழுதிக்கொடுத்து சேரனிடம் இறைவன் நிதி பெற வைத்த தலம்.

இராமர், இலட்சுமணர் மற்றும் பிற தேவர்களும் முனிவர்களும் பூசித்துப் பேறு பெற்ற தலம். திருஞானசம்பந்தர் அனல் வாதம், புனல் வாதம் செய்து சைவத்தை பாண்டிநாட்டில் நிலைபெறச் செய்த தலம். பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பெற்ற பெருமான் வாழும் இடம். இவ்வாறு பல சிறப்பிற்கு உரித்தான திருத்தலமானது, எப்போதும் திருவிழாக்கள் நடந்த வண்ணமே இருக்கும் சிறப்பு வாய்ந்த தலம்.

இத்தலம் பல புராண இலக்கியங்களையுடையது. கலையழகும், சிலைவனப்பும், இசையமைப்பும் ஆயிரக்கணக்கான அழகிய சுதைகளையும் கொண்ட வானுயர்ந்த கோபுரங்களைக் கொண்டது. ஆண்டுதோறும் திருவிழா நடக்கும். அம்மையும் அப்பனும் வீதியில் வருவதும், அண்டிய அன்பருக்கு இன்பமே தருவதும் மதுரையில் காலம் காலமாக நடந்து வருவதாகும். தாமரை மலர்போல் மதுரைப்பதியின் அழகும், நடுவிலுள்ள மொட்டுப் போன்ற மீனாட்சியின் ஆலயமும், மலரிதழ் போன்ற வரிசையான தெருக்களும் சேர்ந்து மதுரையைச் சிவராசதானி என்று போற்றச் செய்துள்ளன. ஒன்பான் கோள்த் தலங்களில் புதன் தலமாகும்.

### தலத்தின் பெயர் காரணங்கள்:

**மதுரை** - **சிவபெருமான் தமது சடையிற் சூடிய பிறையினிடத்துள்ள அமுதமாகிய மதுவைத் தெளித்து. நாகம் உமிழ்ந்த விடத்தை நீக்கிப் புனிதமாக்கியதால் மதுரை எனப் பெயர் பெற்றது.**

**ஆலவாய்**- **சிவபெருமானுக்கு அணியாயிருந்த பாம்பு வட்டமாய் வாலை வாயாற் கவ்வி மதுரையின் எல்லையைக் காட்டியதால் ஆலவாய் என்ற பெயர் வந்தது.**

**கடம்பவனம்** - **கடம்பமரம் அடர்ந்த காடாக இருந்ததால் கடம்பவனம் எனப் பெயர் பெற்றது**

**நான்மாடக்கூடல்** - **மதுரையை அழிக்க வருணன் ஏவிய ஏழு மேகங்களையும் தடுக்கும் பொருட்டுப் பெருமான் தம் சடையினின்றும் விடுத்த நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாகக் கூடிக்காத்ததால் நான்மாடக்கூடல் எனப் பெயர் ஏற்பட்டது.**

அன்னை மீனாட்சி கருவறையில் நின்ற கோலத்தில் இடைநெளித்து கையில் கிளி ஏந்தி அழகே உருவாக மரகத மேனியாக அருள்பாலிக்கிறார். சுவாமி சுந்தரேசுவரர் கருவறையில் சுயம்பு இலிங்கமாக வீற்றிருக்கிறார். கடம்பம், வில்வம் இரண்டும் கோயில் மரங்களாக உள்ளன. பொற்றாமரை, வைகை ஆகிய தீர்த்தங்கள் இத்தலத்திற்கு சிறப்பு சேர்க்கின்றன. இத்தலத்தை பொறுத்தவரை பெண்மைக்கு முக்கியத்துவம் தரும் வகையில், அம்மனின் இடப்பக்கம் சுவாமி வீற்றிருக்கிறார்.

ஒரு முறை திருமலை நாயக்கருக்கு தீராத வயிற்று வலி ஏற்பட்டது. வலி நீங்க மீனாட்சிக்கு தெப்பக்குளம் கட்டுவதாக நேர்ந்து கொண்டாராம். அப்படி தெப்பக்குளம் தோண்டும் போது பிரம்மாண்டமான பிள்ளையார் கிடைத்தார். அவரை சுவாமி சன்னதி செல்லும் வழியில் தெற்கு நோக்கியபடி **"முக்குறுணி விநாயகர்"** என்ற திருப்பெயருடன் நிலைப்படுத்தினர். இவருக்கு ஆவணித் திங்கள் நான்மைப் பிறைநன்னாளில் (ஆவணிச் சதுர்த்தி) 18படி அரிசியில் ஒரே கொழுக்கட்டையாக செய்து படைக்கிறார்கள்.

### கால் மாற்றி ஆடியது ஏன்?

மதுரையை ஆண்ட இராசராச பாண்டியன் 63 கலைகளையும் கற்றுத் தேர்ந்து, 64வது கலையாக நடனக்கலையையும் கடினப்பட்டு கற்றுத்தேர்கிறான். இவ்வண்ணம் நடனக்கலையை கற்றுத்தேர்வது இவ்வளவு கடினமாக உள்ளதே, எவ்வாறு எம் நடராசப் பெருமான் காலம் காலமாக வலதுகாலைத் தூக்கிய வண்ணம் ஆடுகின்றார் என்ற கவலை அவனைப் பற்றியது. எம் முன்னோர்களே இதை கவனத்தில் கொள்ளாத இடத்து நாம் எவ்வாறு கேட்பது என்ற அச்சத்தில் வெளிப்படுத்தாமல் இருந்தார். இருப்பினும், சிவனிரவு வழிபாட்டு நன்னாளிலே இறைவனை வழிபட்டுக்கொண்டு இருந்த பாண்டிய மன்னன் மனம் கேளாமல், இறைவனிடம் **"காலம் காலமாக வலக்கால் தூக்கி நின்று திருநடனம் காண்பிக்கும் இறைவனே! எனக்காக இடக்கால் தூக்கி ஆடக்கூடாதா?"** என்று இறைவனிடம் விண்ணப்பம் வைக்கின்றார். அடியார்க்கு அருளும்




அம்பலவாணப் பெருமான், பாண்டியனின் வேண்டுதலை ஏற்று திருஆலவாய் வெள்ளியம்பலத்தில் இடதுகால் தூக்கி நின்று திருநடனம் காண்பிக்கிறார். பாண்டிய மன்னனும் எம்பெருமானின் திருவருளை எண்ணி போற்றி மகிழ்கின்றான்.

### திருத்தல வரலாறு

மலயத்துவச பாண்டியன் மனைவி காஞ்சனமாலை இருவருக்கும் குழந்தை இல்லாததால் புத்திரப்பேறு வேண்டி வேள்வி செய்தனர். அப்போது உமாதேவி மூன்று தனங்களையுடைய ஒரு பெண் குழந்தையாக வேள்விக்குண்டத்தினின்று தோன்றினாள். குழந்தையின் தோற்றத்தைக் கண்டு அரசன் வருந்தும் போது இறைவன் அசரீரியாக இக்குழந்தைக்கு கணவன் வரும்போது ஒரு தனம் மறையும் என்று கூறினார். இறைவன் கட்டளைப்படி குழந்தைக்குத் 'தடாதகை' எனப்பெயரிடப்பட்டது. குழந்தை சிறப்பாக வளர்ந்து பல கலைகளில் சிறந்து விளங்கியது. மலயத்துவசன் மறைவுக்குப்பின் தடாதகை சிறப்பாக ஆட்சி செய்தாள். கன்னி ஆண்டதால் **"கன்னிநாடு"** எனப் பெயர் பெற்றது.



தடாதகை மணப்பருவத்தை அடைந்தாள். நால்வகைப் படைகளுடன் புறப்பட்டுச் நான்கு திசைகளிலும் மன்னர்களுடன் போர் செய்து வென்றாள். இறுதியாகத் திருக்கைலாயத்தை அடைந்து சிவகணங்களுடன் சிவபெருமானையும் கண்டாள். கண்டவுடன் மூன்று தனங்களில் ஒன்று மறைந்தது. முன் அறிவித்தபடி இறைவனே கணவன் என்பது புலப்பட்டது. திருமணத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. திருமால் முதலிய தேவர்களும் முனிவர்களும் வந்திருந்தார்கள். சிவனுக்கு பக்கத்தில் தடாதகை இருந்ததை காண கண் கொள்ளாக்காட்சியாக இருந்தது. நான்முகன் உடனிருந்து நடத்தினார். பங்குனி உத்திர நன்னாளில் சிவபெருமான், திருமங்கல நாணைப் அம்மையாருக்கு பூட்டினார். எல்லோரும் கண் பெற்ற பயனைப் பெற்றனர். தடாதகை அம்மையே மீனாட்சி அம்மனாக விளங்குகிறார்.

பெருமான் திருமணஞ் செய்தருளியது, பெருமான் போகியாய் இருந்து, உயிர்களுக்குப் போகத்தை அருளுவதை நினைப்பூட்டும். பின்பு சிவபெருமான் தாம் உலகில் அரசு நடத்திக்காட்ட திருவுளங்கொள்ள, இடபக்கொடி மீன்கொடி ஆகியது. சோமசுந்தரர் சுந்தரபாண்டியனாய்க் கோலங் கொண்டு விளங்கினார். சிவகணங்கள் மானுடவடிவு கொண்டனர். பாண்டியன் கோலம்பூண்ட சுந்தரப் பெருமான் மக்களுக்கு அரசனாகவும், பகைவர்களுக்கு சிங்கமாகவும், உலக இன்பங்களை வெறுத்த ஞானிகளுக்கு முழுமுதலாகவும் விளங்கினார்.

### திருக்கோயில் அமைப்பு

பொதுவாக எல்லா கோயில்களிலும் ஒன்று அல்லது நான்கு வாசல்கள் இருக்கும். ஆனால், இத்தலத்தில் ஐந்து வாசல்கள் உள்ளன. அதாவது கிழக்கு பகுதியில் சுவாமி சன்னதிக்கு ஒரு வாசலும், அம்மன் சன்னதிக்கு ஒரு வாசலும் உள்ளன. இத்தகைய அமைப்பு வேறெங்கும் இல்லை. மீனாட்சிக்கும், சுந்தரேசுவரருக்கும் தங்கத்தாலான கோபுரங்களும், நான்கு வாசல் பக்கங்களிலும் இராச கோபுரங்களும் உள்ளன. இதில் தெற்கு கோபுரம் தான் மிகவும் உயரமானது. உயரம் 160 அடி. இதில் 1511 சுதையால் ஆன சிலைகள் உள்ளன. இதை 1559ல் சிராமலை செவ்வந்தி மூர்த்தி செட்டியார் கட்டினார். மேற்கு கோபுரம் 154 அடி உயரம். 1124 சிலைகள் உள்ள இந்த கோபுரம் பராக்கிரம பாண்டியனால் (1315-1347) கட்டப்பட்டது. வடக்கு கோபுரம் 152 அடி உயரம். இதனை மொட்டைக்கோபுரம் என்பார்கள். இந்த கோபுரம் கிருஷ்ண வீரப்ப நாயக்கரால் (1564-1572) கட்டப்பட்டது. பொற்றாமரைக்குளத்தின் வடபுறம் 7 நிலை சித்திரக்கோபுரம். இத்துடன் வேம்பத்தூரார் கோபுரம், நடுக்கட்டு கோபுரம், இடபக்குறியிட்ட கோபுரம் என மொத்தம் 14 கோபுரங்கள் உள்ளன.

**பொற்றாமரைக்குளம்:** நந்தி மற்றும் பிற தேவர்களின் வேண்டுகோளின் படி சிவன் தமது முச்சூலத்தால் பூமியில் ஊன்றி உண்டாக்கியதே பொற்றாமரைக் குளம். கோயிலுக்குரிய தீர்த்தங்களில் இது முதன்மையானது. இதனை சிவகங்கை என்றும் அழைப்பார்கள். தேவேந்திரன் தனது சிவபூசைக்காக பொற்றாமரையைப் பெற்றதும், நக்கீரர் இறைவனை எதிர்த்து வாதிட்டதும் இங்கு தான். மறைமதி, கிரகணம், திங்கள் பிறப்பு ஆகிய நாட்களில் இக்குளத்தில் நீராடி சிவனை பூசித்து வந்தால் வேண்டியதைப் பெறலாம் என்பது நம்பிக்கை. 165அடி நீளமும் 120 அடி அகலமும் உள்ள இக்குளத்தை சுற்றி சிவனின் 64 திருவிளையாடல்களும்சித்தரிக்கப்பட்டுள்ளன. திருக்குறளின் பெருமையை நிலைநாட்டி சங்கப்பலகை தோன்றிய இடம் இது தான்.

(11ஆம் பக்கம் பார்க்க)

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# சிவபூமியில் சிவனைத் தேடி

## கி.மு 300 நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர் கிராமத்தில் குடி கொண்ட ஆதி சிவன் கோயில் வெல்லாவெளி கோயில்தீவு சிவன்கோயில்



நாதனை வில்லைகட்டிச் சடங்கு இடம்பெற்றுவந்த நாதனை நாச்சிமார் கல்லடி பிள்ளையார் கோவில், வெல்லாவெளி.

**"மேதிதோய் குளங்களெல்லாம் வீரப்போர் வரால்மீன் பாயும்
ஓதிதோய் மலர்களெல்லாம் ஒலிப்பன மாதர் கண்கள்
நீதிதோய் வன்னிமைக்கு நிகரில்நா தனைநா டென்பர்
வீதி தோய் வெல்லவூராம் விழுமிய சரீதம் கேளீர்"**
**- மண்டூர்.மு.சோமசுந்தரம்பிள்ளை புலவர் (1964)**

மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசத்தில் பண்டைய வரலாறுகளுடனும், பல தொல்லியல் எச்சங்களுடனும், நாட்டார் கலைவடிவங்கள், நாட்டுப்புற வழிபாடுகள் என்பவற்றுடன் இயற்கை எழில் பொழியும் வாவி ஆறைத் தொட்ட ஆறும், சதுப்பு நிலங்களும், மேய்ச்சல் நிலங்களும், மலைப்பாறைகளும் ஆயிரம் விழுதுகள் தாங்கிய ஆலமரமும், காடுகளும், வயல் வெளிகளும், எருமைகளும், பசுக்களும், கோயில்களும், குடியிருப்புக்களும் ஒருமித்து மருதம் முல்லை, குறிஞ்சியென்ற மூவகை நில அமைப்புக்களை இயற்கையாகக் காட்டி நிற்கும் அழகிய இடம் வெல்லாவெளிப்பிரதேசமாகும்.

இப் பிரதேசம் மட்டு மாநகரின் தெற்கு நோக்கி சுமார் 33 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. களுவாஞ்சிக்குடியிலிருந்து பட்டிருப்பு பாலத்தினை ஊடறுத்து கோயில் போரைதீவு ஊரின் ஊடாகச் சென்றடையலாம். வெல்லாவெளிப் பிரதேசம் அம்மன்குளம், நாதனை, கோயில்தீவு, குளத்து வட்டை என்னும் நான்கு சிறுசிறு குடிசனங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இதில் கோயில் தீவில் இருந்த சிவனாலயமே மிகப்புராதனமானது. போர்த்துக்கீசர் காலத்தில் அழிக்கப்பட்டு இறந்தநிலையில் ஓர் சில சுவடுகளைத் தாங்கி நிற்கும் ஆலயமாகத் திகழ்கின்றது.

### வெல்லாவெளியின் சரித்திரம்

வெல்லா வெளி பிரதேசத்தின் சரித்திரத்தை அறிந்து கொள்வதற்கு **"மட்டக்களப்பு பூர்வசரித்திரம்"** எனும் நூலும், **"நகரம் எழுதிய கல்"** என்று இக்கிராமவாசிகளால் அழைக்கப்படும் குடைவரைக் கல்வெட்டும் முதன்மையும் முக்கியத்துவமும் பெறுகின்றது.

மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தை மூலமாகக் கொண்டு ஆராயும் பொழுது கி.பி 11ம் நூற்றாண்டில் 'நாதனை' எனும் பெயரால் அழைக்கப்பட்டமை பதிவாகியுள்ளது. மட்டக் களப்பின் ஆட்சியாளனாக இருந்த மதிசுதன் வரலாற்றில் இவ்விடயம் வருகின்றது. கி.பி 13ஆம் நூற்றாண்டில் மாகோன் ஆட்சிக்காலத்தில் (1215-1255) உருவாக்கப்பட்ட நாடு காடுப்பற்றின் வடக்கு எல்லையாக நாதனை குறிப்பிடப் பட்டுள்ளது. போர்த்துக்கீசர் காலத்தில் முதன் முதலில் தயாரிக்கப்பட்ட 'தோம்பு' எனப்படும் காணிப்பதிவேட்டில் நாதனை வேலா வெளிக்கண்டம் என்று பதிவு செய்யப்பட்டி ருப்பதனைத் தொடர்ந்து அதன் பின் வந்த ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் தங்களது ஆவணப்பதிவேட்டில் வேலாவெளியை வெல்லாவெளி எனக் குறிப்பிட்ட காலம் முதல் அப்பெயரே இப்பிரதேசத்திற்கு நடைமுறையில் வந்தது.

ஒரு சமூகத்தின் பண்டைய இருப்பை அறிய உதவும் தொல்லியல் சான்றுகளில் கல்வெட்டும் ஒன்றாகும். வெல்லாவெளியின் மலையொன்றிலும், பெருங்கற் பாறையொன்றிலுள்ள குகையொன்றிலும் இரு சாசனங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றின் ஒன்றிலே 'பறுமகன் ஸமுத' என்று எழுதப்பட்டுள்ளது. இதை ஆராய்ந்த வரலாற்றுப் பெருந்தகை சி.பத்மநாதன் அவர்களும், இந்தியநாட்டைச் சேர்ந்த வரலாற்றுப் பேராசிரியர்களும். இலங்கைப் பிராமிச் சாசனங்களில் கையாளப்படும் இச்சொல் தமிழ் சொல்லின் மாற்று வடிவம் என்று குறிப்பிடுவதோடு, இற்றைக்கு 2100 ஆண்டுகளுக்கு முன்னர் வெல்லாவெளியிலே தமிழ் மொழி வழங்கியமைக்கு அது ஆதரமாகின்றது என்று குறிப்பிடு கின்றார். இருப்பினும் இக் கல்வெட்டின் காலம் கி.மு 300 ஆண்டுகளுக்கு முற்பட்டது என பேராசியரியர் சி.பத்மநாதன் அவர்கள் "இலங்கை தமிழர் வரலாறு" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆக வெல்லா வெளிப் பிரதேசம் ஈழத்தமிழரின் ஆதிக்குடியிருப்பை ஆணித்தரமாக உறுதிப்படுத்தியுள்ளமையை கவனிக்க முடிகிறது.

### கோயில் தீவு சிவனாலயம்

கோயில் தீவு என்பது வெல்லாவெளிப்பிரதேசத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள கிராமமாகும். இங்குதான் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட புராதன சிவாலயம் அமைந்திருந்தது. நாதனைக்குப் பிற்பட்ட குடியேற்ற கிராமமாக கோயில் தீவு அமைந்திருந்தாலும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களோடு விளங்கி இன்று மறைந்து விட்ட சிவாலயமாகி விட்டது. ஆனால் இன்றும் இக் கோயில் அமைந்திருந்த காணியை கோயில் வளவு என்றே அழைக்கின்றனர். இக்கோயிலில் அருள் பாலித்த மூலமூர்த்தி சோம சுந்தரர் எனும் பெயரால் போற்றப்பட்டுள்ளார். ஊரின் கிழக்குப் புறமாக உச்சந்தீவு என்னும் வயல்பரப்பைத் தொட்டதாக அமையும் வாவித் தொடுகையை இத்தலத்தின் தீர்த்தமாககக் கொண்டுள்ளனர். இன்றும் **"உச்சந்தீவு தீர்த்தக் கரையும் சோமசுந்தர் இறக்கத்தடியும்"** என்று இக் கிரமவாசிகள் அழைத்தும் வருகின்றனர்.

இவ் ஆலயத்தின் வரலாற்றினை நோக்கும் போது, போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட இச் சிவாலயம் குறித்த இருப்பிடச்சான்றைத் தவிர வேறு எந்த இலக்கியச்சான்றுகளும் கையில் இன்று வரைகிட்டவில்லை. ஆதலால் தொல்லியல் நோக்கிலேயே இவ் ஆலய இருப்பை தேட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் போர்த்துக் கீசரால் அழிக்கப்பட்ட சிவனாலயத்தின் கருங்கல்லினால் செதுக்கப்பட்ட கதவு நிலைகள் வெல்லாவெளிப் பிள்ளையார் கோயிலில் பொருத்தப்பட்டு இருப்பதனை அவதானிக்கலாம். அத்துடன் பரந்த பீடக்கல், ஆசனக்கல், கோயில் வளவின் தென்கிழக்கு மூலையில் அழிபாடுற்றுக் கிடக்கும் பெரிய மரக் கொட்டு பதித்து சுற்றி வரச் சதுர அமைப்பில் கட்டப் பட்டிருந்த தீர்த்தக்கிணறு, அண்மையில் இவ்விடத்தில் தொலைத்தொடர்பு கோபுரம் நிறுவுவதற்காக நிலத்தை அகழ்ந்த போது நிலத்தின் அடியில் இருந்து கிடைத்த சிதைந்த பல கற்துண்டங்கள் என்பன கோயில்தீவில் ஒரு சிவாலயம் இருந்தமைக்கான தடயங்களாக எடுத்துக் கொள்ளமுடியும்.

இச் சிவாலயத்தோடு தொடர்புடைய செவிவழிக்கதை யொன்றும் இவ்வூர் மக்களிடையே காலம் காலமாக நிலவி வருகின்றது. போர்த்துக்கீசர் ஆலயங்களை கொள்ளையிட்டும் அழித்தும் வந்த போது இவ்வாலயத்தின் பெறுமதியான பொருட்களையும், சிலைகளையும் கிடாரம் ஒன்றில் இட்டு சிவன் கோயிலிற்கு நேராக உள்ள நாதனை ஆறு எனும் பூவல் ஆற்றில் போட்டதாகவும் அதையாரும் எடுக்கக்கூடாது என்ற காரணத்தினால், அவற்றைப் பூதம் காவல் செய்வதாக வதந்தியும் பரப்பப்பட்டதனால் அவ் ஆற்றில் எவரும் துணிந்து இறங்குவதில்லை என்றும் கூறப்பட்டு வருகின்றது. இவ் விடத்தை இன்று 'கிடாரம் போட்ட பள்ளம்' என்றும் அழைத்து வருகின்றனர்.

இலங்கையில் உள்ள பண்டைய சிவாலயங்கள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு வரும் திரு.என்.கே. எஸ் திருச் செல்வம் அவர்கள் வெல்லாவெளி கோயில்தீவு சிவன்கோயில் பற்றி ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் (29-04-2012, 05-05-2012) எழுதியதன் சில முக்கிய பகுதிகள் வருமாறு,

**"பல நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டுச் சிறப்புடன் விளங்கிய சிவன் கோயில் இங்கு அமைந்திருந்ததாகக் கூறப்படுகின்றது. இராச மலை எனப்படும் றஜகலப் பகுதியிலிருந்து கிழக்கு நோக்கி ஓடும் சிற்றாறுகள் இரண்டும் ஒன்று சேர்ந்து நாதனை ஆறு என்ற பெயரில் மட்டக்களப்பு வாவியில் கலக்கும் சங்கமத்திற்கு சற்றுத்தூரமாக இச் சிவன் கோயில் அமைந்திருந்தது.**



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

**மிகப்பழங்காலத்தில் இங்கு சிவ வழிபாடு நிலவியுள்ளது. இந்தியாவைச் சேர்ந்த கொங்கண முனிவர் இலங்கை தலயாத்திரை வரும் போது தான் கொண்டு வந்த இலிங்கங்களில் ஒன்றை இப்பகுதியில் வாழ்ந்த ஆதி வேடர் குலத்தவரால் தொடர்ந்து இந்த இலிங்கம் பூசிக்கப்பட்டு வந்ததாகவும் கூறப்படுகின்றது. கி.பி 10 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 13ம் நூற்றாண்டு வரையான காலங்களில் சிறப்புற்றிருந்த ஆலயங்களில் இதுவும் ஒன்று. பூபால கோத்திர வன்னிமைகளின் ஆட்சிக்குட்பட்டிருந்த இப்பகுதியின் அவர்களாலும் இவ்வாலயம் கையாளப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. மட்டக்களப்பு தமிழகத்திலிருந்த ஏராளமான சைவ ஆலயங்கள் ஐரோப்பியர் காலத்தில் அழிக்கப்பட்டன இவற்றில் கோயில் தீவு சிவன் கோயிலும் ஒன்றாகும்."**

இதே போல் இவ் ஆலயத்தின் இருப்பு தொடர்பான



தேடல்களை வெல்லாவெளியைச் சேர்ந்த கவிக்கோ வெல்லாவூர்க் கோபால் அவர்கள் **"வெல்லா வெளி வரலாறும் பண்பாடும்"** என்ற நூலில் பதிவு செய்துள்ளார். மற்றும் கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இளம் வரலாற்றுத்துறை விரிவுரையாளர் நிலாந்தி பொன்னுத்துரை அவர்களும் **"வெல்லா வெளிக்கிராமத்தின் வரலாறு தொல்லியல் எச்சங்களை ஆவணப்படுத்தலும்"** என்ற கட்டுரையில் இக் கோயிலின் வரலாற்றை ஆழப்பதிவு செய்துள்ளார். தற்போது இவைகளெல்லாம் இவ்வாலயத்தைப் பற்றி அறிந்து கொள்ளக் கூடிய இலக்கிய ஆதரங்களாகும்.

கிழக்கிலங்கையில் கலிங்கமாகோனின் செல்வாக்கு மேலோங்கிய காலகட்டத்தில் கொக்கட்டிச்சோலை, மண்முனை, ஆரையம்பதி, கோயில் போரைதீவு, திருக்கோயில் ஆகிய இடங்களில் அமைந்துள்ள கோயில்களில் வீராகமச் செல்வாக்கும், வீரசைவ பத்தி மரபுகளும், கோயில் தொண்டு ஊழியமுறைகளும், குடிவழக்கு மரபுகளும் செல்வாக்குப் பெற்றிருந்தன. இன்றளவும் கொக்கட்டிச் சோலை சிவன் கோயில் வீரசைவ மரபுகளைத் தழுவியே நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் மகோன் காலத்திற்குட்பட்ட வெல்லாவெளி கோயில் தீவு சிவன் கோயிலிலும் வீரசைவ நெறி தழைத்தோங்கியிருக்க வேண்டும். இதனை தற்கால வெல்லாவெளி கிராம மக்களின் சமயப்பண்பாட்டு அம்சங்களினூடாக அவதானித்துக் கொள்ளலாம். எது எவ்வாறாயினும் சிதைந்த சிவாலயங்களை மீள கட்டியெடுப்பது சிவ புண்ணியமாகும். புராதன சோமசுந்தரப் பெருமானின் திருவருள் மீண்டும் வெல்லா வெளி மண்ணின் கோயில் தீவில் நிலை கொள்ள இப்பிரதேசத்தாரின் மனத்திலும் வாக்கிலும், செயலிலும் அப் பெருமானின் திருவருள் கைகூட வேண்டும்.

**"ஊர் பரந்த உலகின் முதல் ஆகிய ஓர் ஊர் இது- என்னப்
பேர் பரந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் - இவன் அன்றே!"**
**-சம்பந்தர் தேவாரம்**

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

**திருச்சிற்றம்பலம்**

### ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

**சித்திரை திருவிழா:** சித்திரைத் திங்கள் வளர்பிறையில் நடக்கும் 12 நாள் விழாவில் முதல் நாள் கொடியேற்றம், பின் ஒவ்வொரு நாளும் அம்மனும் சுவாமியும் வாகனங்களில் வீதி உலா வருவர். 8ம் நாள் மீனாட்சி பட்டம் சூடல், செங்கோல் வழங்கும் நிகழ்வு, 9ம் நாள் மீனாட்சி வீதி உலா, 10ம் நாள் மீனாட்சி திருக்கல்யாணம், 11ம் நாள் தேர்த்திருவிழா, 12ம் நாள் தீர்த்த விழா, வைகையில் அழகர் ஆற்றில் இறங்கி பத்தர்களுக்கு காட்சி தருவதுடன் சித்திரை திருவிழா முடிவடையும்.

வைகாசியில் 10 நாள் வசந்த விழா, திருஞான சம்பந்தர் விழா. ஆனியில் ஊஞ்சல் திருவிழா. ஆடியில் முளைக்கொட்டு விழா. அடுத்து 12 நாள் நடக்கும் ஆவணி மூலப்பெருவிழாவில் கருங்குருவிக்கு உபதேசம், நாரைக்கு முத்தி தந்தது, மாணிக்கம் விற்ற அற்புதம், தருமிக்கு பொற்கிழி வழங்கியது, உலவாக் கோட்டை அருளிய அற்புதம், அங்கம் வெட்டியது, வளையல் விற்றல். குதிரை கயிறு மாறிய அற்புதம், பிட்டுக்கு மண் சுமந்தது, விறகு சுமந்த அற்புதம் ஆகியவை இடம் பெறும் புரட்டாசியில் ஒன்பானிரவு (நவராத்திரி விழா), ஐப்பசியில் 6 நாள் கோலாட்டத் திருவிழா, அன்னத் திருமஞ்சனம், கார்த்திகையில் தீபத்திருவிழா, 1008 சங்குத் திருநீராட்டு நடக்கிறது. மார்கழியில் மீனாட்சிக்கு 4 நாள் எண்ணெய் காப்புத் திருவிழா, தைத் திங்களில் சங்கராந்தியன்று கல் யானைக்கு கரும்பு தந்தருளிய அற்புதம், வலைவீசியருளிய திருவிளையாடல், தைப்பூசத்தன்று வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளத்தில் மீனாட்சி சுந்தரேசுவரர் தெப்பத்தில் உலா வரும் தெப்பத்திருவிழா நடக்கும். மாசித் திங்கள் பெருஞ்சிவனிரவு அன்று 1008 சங்குத் திருநீராட்டும் நான்கு சாமப்பூசைகளும் இடம்பெறும். பங்குனித் திங்களில் மீனாட்சியும் சுந்தரேசுவரரும் செல்லூர் திருவாப் புடையார் கோயிலுக்கு எழுந்தருள்வர்.

திருக்குடமுழுக்கு: கி.பி. 1708ல் விஜயரங்க சொக்கநாதர் காலத்தில் சுந்தரேசுவரருக்கு மட்டும் திருக்குட நன்னீராட்டு நடந்துள்ளது. அடுத்து 1877ல் நகரத்தார் பெருமக்களால் ஒரு குடமுழுக்கும், 1923ல் வரலாறு கண்டிராத வகையில் ஒரு குடமுழுக்கும், அடுத்து 1974, 1997 ஆகிய ஆண்டுகளிலும் குடமுழுக்குகளும் நடந்துள்ளது.

**திருச்சிற்றம்பலம்**

# தென்னாட்டு நிகழ்வுகள்



(13-02-2023) - தென்னாட்டில் இடம்பெற்ற ஒரு மண்டலத் திருமுறை விண்ணப்பம் நிறைவு



(01-02-2023) - செந்தமிழ் முறையில் புதுமனை புகுவிழா வழிபாடு







(15-02-2023) - யாழ் பல்கலைக்கழகத்தில் பண்ணிசைப் பயிலரங்கம்



(05-02-2023) - நிறைமதி வழிபாடும் திங்கள் இதழ் வெளியீடும்



(15-02-2023)-தென்னாட்டில் "திருஎழுக்கூற்றிருக்கை" பதிகம் விண்ணப்பித்தல்





(18-02-2023) - பெருஞ்சிவனிரவில் தென்னாட்டு அறநெறி மாணவர்களின் கலை நிகழ்வுகள்

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் முப்பதாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு கும்பம் நல்லோரை மாசித் திங்கள் 23ம் நாள் நிறைமதி அன்று (07-03-2023 செவ்வாய்க்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org